Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

ஸ்ரீ பூமீஸ்வர க்ஷேத்ர மஹாத்மியம்

எனப்படும்

திருநல்லத் தலவரலாறு

(கோனேரிராஜபுரம்)



வடமொழி நூலின் தமிழாக்கம்

S. ஜானகி

கோனேரிராஜபுரம்

(Via) கும்பகோணம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

ஸமர்ப்பணம்

தாயினும் மேலான பரிவுடன் எனக்கு ஸமஸ்க்ருத மொழியைப் புகட்டியவர்களும் இவ்வூரில் தலைசிறந்த மஹாஜன வாழ்ந்து தற்போது அமரத்வம் எய்தியவர்களும், நம் நெஞ்சங்களில் என்றும் நீங்கா இடம் பெற்றவர்களுமான என் குருநாதர் 'அண்ணு' **நாராயணஸ்வாமி அய்யர்** அவர்களின் திருவடிகளில் வணங்கி அன்னாரின் நினைவிற்கு அஞ்சலியாக இந்நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

C. S. S.

உ சிவமயம்



1903 ~ 1969

காலஞ்சென்ற திரு. K. கோவிந்தசாமி முதலியார் அவர்கள் கோனேரிராஜபுரத்தில் 1903-ம் ஆண்டு பிறந்தவர் ஆவார். 1917-ம் ஆண்டு அன்று மலாயா என்னும் இன்றைய மலேசியாவுக்கு கடல் கடந்து வந்தவர்கள் 1969-ம் ஆண்டு காலமானார்கள். அவருக்கு இந்தியாவிலும் மலேசியாவிலும் குடும்பங்கள் இருக்கின்றன. இவ்வரிய ஆலய வரலாற்று புத்தகத்தை அவரின் பிள்ளைகள் வெளியீடு செய்கின்றோம்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

ஸ்ரீ பூமீஸ்வர க்ஷேத்ர மஹாத்மியம்

எனப்படும்

திருநல்லத் தலவரலாறு

(கோனேரிராஜபுரம்)

வடமொழி நூலின் தமிழாக்கம்

S.ஜானகி

கோனேரிராஜபுரம்

(Via) கும்பகோணம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

ஓ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பரை
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்
காஞ்சீபுரம் - 631 502.

ஸ்ரீமுகம்

கேம்ப :
மாணிக்க மங்கலம்
(காலை)

சோழ மண்டலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் மாயூரம் தாலுக்காவில் கோனேரிராஜபுரம் என்று இப்போது வழங்கப் படும் ஸ்ரீ பூமீச்வர க்ஷேத்ரத்தின் மாஹாத்மியம் வடமொழி யில் ஸனத்குமாரருக்கு நந்திகேச்வரரால் உபதேசிக்கப்பட்ட தாக ஸ்கந்த புராணத்தில் பத்து அத்யாயங்களில் காணப்படு கிறது.

இதில் பூமிதேவி, தான் ஸ்திரமாயிருப்பதற்காக மஹா விஷ்ணுவின் உபதேசத்தின்படி ஸ்ரீ உமாமஹேச்வரரை பூஜித் தது. பூமிதானத்தின் மஹிமை, பூமிதேவி செய்த ஸ்தோத்ரம், இதன் பராயண பலன், இங்கு ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸன்னி திக்கு ஸமீபத்திலுள்ள ஞான கூபத்தின் மஹிமையினால் கிளி ஆத்மஞானத்தை அடைந்தது, ப்ரம்மராக்ஷஸ், பிசாச தன்மை களை அடைந்தவர்களின் சாப நிவர்த்தி, புரூரவஸ் சக்ரவர்த்தி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

யின் குஷ்டரோகத்தை நிவர்த்தி செய்த ஸ்ரீ வைத்யநாத ருடைய சக்தி மற்றும் இந்த க்ஷேத்ரத்திலுள்ள மூர்த்திகள், தீர்த்தங்களின் சிறப்புகள் முதலிய விசேஷங்கள் விளக்கப்பட் டிருக்கின்றன.

இந்த க்ஷேத்ர மஹிமையை தமிழறிந்தவர்கள் அறிந்து கொள்வதற்காக இப்போது தமிழில் எழுதப்பட்டுள்ள 'திரு நல்லத் தலவரலாறு' என்னும் நூல் மூலநூலை அனுஸரித்து எளிய தமிழ் நடையில் விஷயங்களை நன்முக விளக்குகிறது. இதில் இந்த க்ஷேத்ரத்தைப்பற்றி ஸ்ரீ ஞானஸம்பந்தர், ஸ்ரீ திருநாவுக்கரசர் என்னும் முக்ய நாயன்மார்கள் அருளி யுள்ள பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழறிந்த பக்தர்கள் இந்நூலின் மூலம் ஸ்ரீ பூமிக்ஷேத்ர மஹிமையை உணர்ந்து இங்கு விளங்கும் தீர்த்தங்களில் ஸ்னானம் செய்தும், இங்கு ஸன்னதி கொண்டுள்ள ஸ்ரீ தேஹ ஸௌந்தரீ ஸமேத ஸ்ரீ உமா மஹேச்வரர், ஸ்ரீ வைத்யநாதர், ஸ்ரீ நடராஜர் முதலிய மூர்த்திகளை வழிபட்டும் இம் மூர்த்தி களின் அருளால் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

இந்நூலின் மொழி பெயர்ப்பு, ப்ரசுரம் இவைகளை ஏற்று நன்கு நிறைவேற்றியுள்ள கோனேரிராஜபுரம் ஸ்ரீ ஸ்வாமிநாத அய்யர், ஸ்ரீ ஸ்ரீனிவாஸ அய்யர் ஸஹோதரர்களும், ஸ்ரீனிவாஸ அய்யர் குமாரி ஜானகிக்கும், இவர்களின் குடும் பத்தினரும் ஸர்வ ஸௌபாக்யங்களையும் அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி :

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

முன்னுரை

கோனேரி ராஜபுரம்என்றும், திருநல்லம்என்றும் வழங்கப்படும் இவ்வூர் பூமீஸ்வர க்ஷேத்ரம் என்று பெயர் பெற்று விளங்கியது. இத்தலத்தின் மஹிமையைப் பற்றி ஸநத்குமார முனிவர் கேட்க நந்தீஸப் பெருமகனுர் விரிவாகக் கூறுவதாக ஸ்ரீகந்தபுராணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. அஃது முன்பே சுருக்கமாக ஸம்ஸ்க்ருதத்தில் நூலாக வெளியிடப்பட்டது. அதனைப் பலரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டுமென எனது பெரிய தந்தையார் திரு இரா. சுவாமிநாத அய்யர் அவர்கள் பேரவாக் கொண்டார்கள். மிகவும் வயோதிக நிலையிலும் அவர் அளித்த ஊக்கமே இந்நூல் உருவாக பெருந்துணை செய்தது.

முதலில் என் பெரிய தந்தையாரால் இந்நூல் மொழி பெயர்ப்பு பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்ட போது, 'இது நம்மால் ஆகக்கூடியதா? என்று நான் திகைத்து நின்றேன். ஏன்? தற்போது அப்பணி நிறைவேறிய நிலையிலும் 'இதை நாமா செய்தோம்' என்று திகைப்பாகவே உள்ளது. எனது சிற்றறிவுக்கு எட்டிய வரை நன்முகவே செய்ய முயன்றிருக்கிறேன். ஆன்றோர்கள் குற்றங்களைப் பொறுத்து ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

வணக்கத்துடன்

S. ஜானகி

D/o ஸ்ரீ R. ஸ்ரீனிவாசய்யர்
கோனேரிராஜபுரம் 612 201

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

பணிந்துரை

அறிவிற் சிறந்த ஔவையார் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என அருளிச் செய்தார். ஊர்கள் தோறும் கோயில்கள் வேண்டும் கோவிலில்லா ஊரிலே குடி இருக்க வேண்டாம் என்பது பண்டைப் பழமொழி. எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளுக்கு கோயில் எதற்கு என சிலர் கேட்கின்றனர்.

வானொலி நிலயத்திலிருந்து பாடும்போது வெளிவரும் மின்சார காந்த அலைகள் வானில் பறந்து பாய்ந்தாலும் ஒலி வாங்கியின் உதவியின்றி அப்பாடலை அனுபவிக்க முடிகின்றதா? பூமிக்கடியில் நீர் எங்கும் வியாபித்து இருந்தா

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

லும் கிணறு தோண்டித்தானே அதை நாம் வெளியே கொண்டு வந்து பயன்படுத்து கிறோம். மின்சாரம் ஆகாயம் முழுதும் வியா பித்து இருந்தாலும் அதை ஒரு மின்சார நிலை யத்தின் மூலமாகத்தானே மக்களுக்கு பயன் படுத்த வேண்டி இருக்கிறது. பசுவின் உடல் முழுவதும் பால் சத்து வியாபித்து இருந்தா லும் அதன் மடியின் வழியாகத்தான் பசு பால் சுரக்கின்றது. அது போலத்தான் கடவுள் அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாக வியாபித்து இருந்த போதிலும் கோயிலில் தான் சிறப்பாக வெளிப்பட்டு நின்று மக்க ளுக்கு அருள் புரிகின்றார். ஆதலினாலேதான் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று ஔவை பிராட்டியார் அருளிச் செய்துள்ளார்.

வீட்டில் சமைக்கவும், குளிக்கவும், சாப்பிட வும் தூங்கவும் தனித்தனி அறைகள் இருப்பன போலவும், நகரத்தில் சாமான்கள் வாங்கவும், நாடகம், திரைக்காட்சி பார்க்கவும், வழக்காட வும் தனித்தனி இடங்கள் அமைந்திருப்பது போலவும் இறைவனை மக்கள் வழிபட கோயில் கள் இன்றியமையாதவைகளாய் இருக் கின்றன. உலகப்பற்றினின்றும், கவலையினின் றும் நீங்கிசிறிது நேரமாவது நாம் கடவுளிடம் மனதை செலுத்தும் இடம் கோவிலேயன்றி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

வேறு யாது உளது? வீட்டிலே கடவுள் வழி பாட்டிற்குதனி இடமும், தனி நேரமும் ஒதுக்கி வைக்க எல்லோராலும் முடியுமா? கோயிலில் அன்பர்கள் இறைவனே வாழ்த்தும் வாழ்த் தொலியும் கற்பூரம், ஊதுபத்தி, நறுமலர் இவைகளின் நறுமணமும், மூர்த்திகளின் திருஉருவ பொலிவும் நம்மை பரவசப்படுத்து கின்றன. திரிகரண சுத்தமும் ஏற்படுகின்றது. ஆகம விதிப்படி திருக்கோயில்களில் எழுந் தருளப் பண்ணியுள்ள மூர்த்தங்கள் வெறும் சிலைகள் அல்ல அவைபெரிய டைனமோக்கள். யந்திர ஸ்தாபனமும், பிராணப்ரதிஷ்டையும் செய்யப்பட்டுள்ள மூர்த்தங்கள் தங்கள் அனுக் கிரக சக்தியை இடைவிடாமல் பரப்பிக் கொண்டே இருக்கின்றன. அவை வேண்டு வார் வேண்டுவனவற்றை வாரி வழங்கும் ஆற்றல் பெற்றவை. ஆகவே ஆலயங்கள் அருள் நிலையங்கள் என்பதில் ஐயமில்லை.

இப்படி அருள் நிலையங்களாக திகழும் ஆயிரக்கணக்கான ஆலயங்களில் திருநல்லம் என நாயன்மார்கள் பாடி போற்றி புகழ்ந் திருக்கும் கோனேரிராஜபுரம் சிவாலயம் சிறப்பு வாய்ந்த ஓர் ஸ்தலமாகும். இதன் பெருமையை கந்த புராணத்தில் விரிவாக காணலாம். அது வட மொழியில் இருப்பதால் பலர்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

அதை பூரணமாய் அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் இருந்தது இக்குறையை நீக்க பல வருஷங்களாக சிவநேசச் செல்வர் ஆர். ஸ்வாமிநாத அய்யர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி திருமதி ஜானகி மூலம் நிறை வேறிவிட்டது. வடமொழி மூலத்தை திருமதி ஜானகி வெகு திறமையுடன் எளிமையும், எழிலும் நிறைந்த நடையில் தமிழாக்கம் செய் திருப்பதை நான் முழுதும் படித்து இன்புற் றேன். இனி மக்கள் எல்லோரும் இப்புத்த கத்தை படித்து நம் திருநல்ல க்ஷேத்ரத்தின் பெருமையை பூரணமாகஉணர்ந்து நம் ஆலய வழிபாட்டில் முன்னிலும் அதிகம் ஈடுபட்டு அருள்மிகு உமாமஹேஸ்வரரின் திருவருள் பெறுவதே நாம் செய்யும் கைம்மாறு ஆகும். ஆண்டவன் அருள் புரிவாராக.

K. S. ராமஸ்வாமிஅய்யர்
கோனேரிராஜபுரம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

அருள்மிகு தேஹஸுந்தரீ ஸமேத உமாமஹேசர் துணை

செய்யட்டும்

ஸ்ரீ பூமீஸ்வர க்ஷேத்ர மஹாத்மியம்

என்னும்

திருநல்லத் தல வரலாறு

(வடமொழி மூலத்தின் தமிழ் வடிவம்)

முதலாம் அத்தியாயம்

ஸநத்குமாரர் நந்திகேஸரை கேட்கிறார்

ஹே பகவானே! நந்தீஸரே, குற்றமில்லாதவரே, எல்லாம் அறிந்தவரே, கருணைக்கடலே, பூமீஸ்வர மஹிமையை தயவு கூர்ந்து எனக்கு சொல்லுங்கள். கோகர்ண க்ஷேத்ர கதையின் நடுவில் பூமிநாதரின் சரிதம் சுருக்கமாக கேட்கப்பட்டது. அந்த புண்ய க்ஷேத்ரம் எங்குள்ளது? பூமிதேவி எதற்காக ஈஸனை வழிபட்டாள்? ஈஸன் அவளுக்கு என்ன வரமளித்தார் என விரிவாகச் சொல்லுங்கள். உம்மால் இவ்வுலகம் புனிதமடைந்தது. உமது தந்தையான சிலாதருக்கு ஸமமான முனிவர் ஒருவருமில்லை. அவரை வர்ணிக்க சிவபெருமானால் தான் முடியும். முருகரின் சீடரும், சிவனுக்கு பிரியமானவரும் அவரது உத்தரவைக் காப்பதில் ஆசையுள்ளவரும், பிறருக்கு அருள்வதில் தயவுள்ளவருமான உமக்கு ஸமம் யாருமில்லை என நான் எண்ணுகிறேன். அதனால் உம்மைக் கேட்டேன் என் புண்யவசத்தாலேயே உம்மை அடைந்தேன். நான் பாக்யவான். உமது தர்ஸனத்திற்குப் பின் ப்ரார்த்திக்க வேண்டியது ஒன்றுமில்லை. மூவுலகிலும் சிறந்த சிவஞானத்தை அளிக்கும் இந்த சிறந்த கதையை எனக்கு சொல்லுங்கள் என்றார்.

சூதர் சொல்கிறார்:

இவ்விதம் கேட்கப்பட்ட நந்திகேஸர் "ஸனகாதிகளால் சொல்லப்பட்டதும் புண்யமானதும் அமுதம் போன்றதுமான

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

கதையைச் சொல்கிறேன் சிரத்தையுடன் கேளுங்கள். பகவான் சிவபதத்தைக் கொடுப்பார்'' என்று சொன்னார்.

நந்திலர் சொல்கிறார் :

''ப்ரம்மாவின் மனதில் உண்டான பகவானின் குணங்களைப் பேசுவதில் மௌனமே சிறந்த மொழி. பூமி ஸ்தான மகிமையை முழுதும் சொல்ல ஆதிசேஷனாலும் முடியாது. சுருக்கமாகச் சொல்கிறேன். முன்பொருமுறை பூமிதேவி துராத்மாவான அசுரனால் பாதாளத்திற்கு கொண்டு செல்லப் பட்டாள். அப்போது வராஹரூபமெடுத்த மஹாவிஷ்ணுவானவர் பூமியை மீட்டு மேலே கொணர்ந்தார். பிறகு அந்த பூமி, மஹாவிஷ்ணுவால் ஷடாக்ஷர மந்த்ர உபதேசம் செய்யப்பட்டு 'நீ ஸ்திரமாயிருக்கும் பொருட்டு சிவபெருமானை பூஜை செய்' என உத்தரவிடப்பட்டாள். அவளும் அந்த உத்தரவை சிரமேற்கொண்டு, ''அவ்விதமே செய்கிறேன். நான் பூஜிக்கும் இடத்தை சொல்லுங்கள்''என்று கேட்டாள்.மஹாவிஷ்ணு, 'எந்த இடத்தில் காமக்ரோத முதலான தோஷங்கள் இல்லாத முனிவர்களும், அந்தணர்களும் ஆசார நியமத்துடன் எப்போதும் தபஸ் செய்கிறார்களோ, எந்த இடத்தில் அமுதம் பெருகும் மரங்களை உடைய புண்யமான காடு உள்ளதோ, அவ்விடத்தை உன்னால் அறிய முடியாவிடில் கால் முதலிய உடலின் பாகங்களில் எந்த இடம் சிறந்ததோ, அந்த இடத்தை அறிந்து அங்கு பூஜை செய். சரீரங்களுக்குள் தலை, சிறந்த பாகம்; புலன்களுக்குள் கண் சிறந்தது; ஹ்ருதயம் ஆத்ம ஸ்தானம் என்று கவிகள் சொல்கிறார்கள். சிவபெருமான் தேவியுடன் கூட இதயமாகிற தாமரையில் சிவகங்கைக் கரையில் தாண்டவமாடுகிறார். பூமிதேவியாகிய நீ எல்லா அவயவங்களிலும் உள்ளாய். உலக உபகாரியான அகத்தியரால் கொணரப்பட்ட காவிரி உன்னிடத்தில் பூரணமான ஜலம் உள்ளதாக இருக்கிறது. அங்கு விருஷனால் பூஜிக்கப்பட்ட ஒரு தல்மும் அஸ்வத்த வனமும் அந்த காவிரியின் கரையில் உள்ளது. அத்தலத்தில் சூரியன் பூஜித்து நற்கதி அடைந்தார். அங்குள்ள குளத்தையும் தன் பெயரால் விளங்க வைத்தார். அத்தலத்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

திற்கு தெற்கே 2 க்ரோச தூரத்தில் பத்ரம் என்று பெயர் பெற்றதும் கடலிலிருந்தும் உண்டானதுமான ஒரு அரசமரம் உள்ளது. அவ்விடம் உன் ஈடற்ற கண் பாகமாகிறது. நீ அங்கேயே ஒரு திட்டாணியையும், ஒரு லிங்கத்தையும் அமைத்து மேற்கு முகமாக ஈஸனை ப்ரதிஷ்டை செய்து பூஜித்து ஸ்திரத் தன்மையை அடைவாயாக' என்று கூறி மஹாவிஷ்ணு மறைந்தார்.

பூமிதேவியும் மஹாவிஷ்ணுவால் சொல்லப்பட்டபடி, சிவ பூஜாவிதிகளை அறிந்து, காவிரி நதியையும், முனிவர்களையும் அந்த தேஜினீவனத்தையும் கண்டு அதற்கு வாயு திக்கில் உள்ளதும், அநேக கிளைகள் உள்ளதும், பலவித பக்ஷிகளுடன் கூடியதும், பற்பல மரங்களை உடையதும், புண்யத்தை கொடுக்கிறதும், அழகானதுமான 'பத்ராஸ்வத்தம்' என்ற இடத்தை அடைந்து அங்கு ப்ரம்ம தீர்த்தம் என்ற உத்தமமான குளத்தையும் கண்டாள். அவ்விடத்திலேயே சிவலிங்கத்தை ஸ்தாபித்து பூஜிக்க முடிவு செய்தாள்.

சூதர் சொல்கிறார் :

ஹே முனிவர்களே! இந்த பூமிதேவி சரிதத்தை சொல்கிறேன் கேளுங்கள். கேட்போருக்கு அநேக புண்யம் உண்டாகிறது. பாபங்கள் நாசமாகின்றன. சிவபக்தி உண்டாகிறது. மிகவும் கொடுத்து வைத்தவர்கள் தான் இந்தக்கதையை கேட்கவும், படிக்கவும், எழுதவும் முடியும். இப்படி மூவகையிலும் கொடுத்து வைத்தவர்கள் இருக்க முடியாது என்று கூறினார் இது க்ஷேத்ர உற்பத்தி எனப்படும் முதல் அத்தியாயம்.

இரண்டாம் அத்தியாயம்

சூதர் சொல்கிறார் :

கேட்கின்ற அனைவருக்கும் ஆயுளையும், ஆரோக்கியத்தையும் வளர்க்கிற மகத்தான கதையை மேலே சொல்கிறேன். பூமி தேவியானவள் முதலில் அச்வத்த மரத்து அடியிலுள்ள ப்ரம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பரம பக்தியுடன், வேத

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

வேதாங்கங்களில் சிறந்தஎல்லா ப்ராமணர்களிடமும் உத்தரவு பெற்று தன் விஷயத்தை தெரிவித்தாள். அந்த ப்ராமணர் களும் அதைக் கேட்டு, "பாபமற்றவளே! நாங்கள் பல நூறு யுகங்களாக பூமியின் நன்மைக்காக செய்த தபஸ் இப்போது சிவபெருமானருளால் பலன் பெற்றது. வெகுகாலம் ஜீவிக்கிற வர்களுக்கு எப்படியும் மங்களங்கள் ஏற்படும் என்ற பெரியோர் களின் வாக்கு மெய்யாயிற்று. பூமி தேவியாகிய நீ தானகவே வந்து எங்களுக்காக சிவனை ஸ்தாபிதம் செய்யப் போகிறாய். இவ்விதம் நடக்கப்போகிறதென முன்பே அசரீரி வாக்கு சொல்லப்பட்டது. எங்களால் உண்டாக்கப்பட்ட ப்ரம்மதீர்த்த மானது நீ ஸ்நானம் செய்ததால் மேலும் உத்தமமாயிற்று. சிவபெருமானுக்கும், உனக்கும் உதவியாகவும் பிரியமானதாக வும் எது செய்ய வேண்டுமோ, அதை நாங்கள் செய்கிறோம்" என்று சொன்னார்கள். அதை ஏற்று பூமிதேவியும், ஒரு சுப யோக சுப நக்ஷத்ர சுபதினத்தில், அஸ்வத்த மரத்தின் கிழக் காக ஒரு உத்தமமான லிங்கத்தை ஸ்தாபித்து ஒரு கோயிலை யும் கட்ட விஸ்வகர்மாவை மனதால் நினைத்தாள்.

நினைத்த மாத்திரத்தில் விச்வ கர்மாவும் வந்து பூமி தேவியையும் ஜடை, புலித்தோல் ருத்ராக்ஷம் இவைகளை தரித்தவர்களும், திருநீறு பூண்ட மேனியுடன் அனுஷ்டானம் செய்து கொண்டிருப்பவர்களுமான அந்தணர்களையும் வணங்கி, "நான் கொடுத்து வைத்தவனாய் இருக்கிறேன். பூமி தேவி யாலும், தங்களாலும் ஏவப்படும் காரியங்களை என் வேலைக் காரர்கள் மூலம் செய்விக்கிறேன்" என்று கூறி நின்றார். உடனே பூமி தேவி "சிற்பக் கலையில் உனக்கு உள்ள திறமை முழுமையையும் இந்த லிங்க நிர்மாணத்தில் காட்டு".

வ்ருஷப லக்னத்தில் இந்த ப்ராமணர்களின் முன்னிலையில் ந்யாய விதிகளின்படி கோபுரத்தையும், ரிஷிகள் எல்லோரும் வசிக்கத்தக்க ப்ரகாரங்களையும், கர்ப்பக்ரஹம் மஹா மண்டபம் முதலியவைகளையும், ஸோமாஸ்கந்த மூர்த்தியையும், என்பெயர் கொண்ட தாண்டவ மூர்த்தியையும், மற்றும் பல சிவரூபங்களை யும் நிர்மாணம்செய். பிறகு நான் மந்த்ரத்தால் ஆவாஹனம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

செய்கிறேன் என்றுசொன்ன மாத்திரத்தில் அதேமுஹூர்த்தத் தில், வைகாசி மாத பஞ்சமியும், ரோஹிணியும், குருவாரமும் விருஷப லக்னமும் கூடியநேரத்தில் எல்லா லக்ஷணங்களும் பொருந்திய உமாமஹேஸ்வரியும், தேவியையும் நிர்மாணம் செய்தார். பூமிதேவியால் நிர்மாணக்கப்பட்ட மாத்திரத்தில், ஸ்வர்க லோகத்திலிருந்து அங்குள்ள தேவர்களுடன் கூட வந்து சேர்ந்த ப்ருஹஸ்பதியானவர் ஸாஸ்த்ரோக்தமாகமத்தில் சொல்லப்பட்டபடி ஈஸ்வர ப்ரதிஷ்டை செய்தார். பூமிதேவி யும், சிறந்த ருத்ரம் ஸாமகம், த்ரயம்பக மந்த்ரம் முதலியவை களால், ரத்னமிழைத்த 1000 தங்கக் கலசங்களால், தேவ கங்கா ஜலத்தை அபிஷேகம் செய்து தேவ துந்துபி வாத்ய கோஷங்களோடு திவ்ய அன்னத்தையும் நிவேதனம் செய்து. அன்ன பானங்களாலும், குபேரபட்டணத்திலிருந்து கொணரப் பட்ட கோடிக்கணக்கான பணங்களாலும் நால்திசைகளிலிருந் தும் வந்த ப்ராமணர்களை திருப்தி படுத்தினாள். அது முதல் அந்த தலம் பூமீஸ்வரம் என்று ப்ரஸித்தி அடைந்தது. பூமி தேவியும் வரம் பெற்றாள்.

சிவபெருமான் சொல்கிறார் :

''ஹே கல்யாணி! பாபமற்றவளே, உனக்கு இனி அசுரர் களால் சலனமோ, பீடையோ உண்டாகாது. என் உத்தரவுபடி நடக்கிற மேருமுதலான மலைகள உனக்கு ஆதாரமாயிருக்கும். ஸம்பூர்ணமாயிருக்கிற நான் ஸத்யமாக சொல்கிறேன் ஸந்தேகம் வேண்டாம். கைலாசத்திலும், காசியிலும், புலியூரி லும், திருவெண்காட்டிலும், வேதாரண்யத்திலும், கும்ப கோணத்திலும், திருவிடை மருதூரிலும், திருவையாற்றிலும், பத்ரிகாஸ்ரமத்திலும், உன்னால் பூஜிக்கப்பட்ட இந்த லிங்கத்தி லும், நான் பூரணமாய் வசிக்கிறேன். இந்த க்ஷேத்ரத்தின் கிழக்கில் ஒரு தீர்த்தத்தை நிர்மாணம் செய். எனது தலையில் இருக்கும் கங்கையை அங்கு அனுப்புகிறேன். ப்ருஹஸ்பதி முதலியோர் அதில் ஸ்நானம் செய்யட்டும். அதில் ஸ்நானம் செய்கிற மனுஷ்யர்களுக்கு முக்தி கைமேல் உள்ளது. மூன்று தடவை அந்த ஜலத்தில் நின்று 'பூமி: பூம்னி' என்ற

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

மந்த்ரத்தை ஜபித்து ஸ்நானம் செய்ய வேண்டும். வைகாசி மாதத்தில் ஸ்நானம் செய்தல் கோடி பலனைத் தரும். உன் சரீரத்தில் உள்ள (பூமியிலுள்ள) ஸகல தீர்த்தங்களும் எனது ஆக்ஞையால் இங்கு வந்து சேரும். வைகாசி மாத பௌர்ணமியும் விசாக நக்ஷத்ரமும் கூடியிருக்கும் போது இதில் ஸ்நானம் செய்தல் கோடி கோடி பலனைத் தரும். மிகவும் பாக்யவான்களே இதில் ஸ்நானம் செய்வார்கள். இங்கு நீ ஒரு மாத காலம் ஸ்நானம் செய்து ப்ருஹஸ்பதி சொன்னபடி எனக்கு ஷோடச உபசாரங்களுடன் பூஜை செய்து வந்தால் எனக்கும் தேவிக்கும் ஈடில்லா மகிழ்ச்சி உண்டாகும். ப்ருஹஸ்பதியிடம் தக்ஷிணையுடன் கோதானம் செய்து நீ ஈடற்றபலனை அடைவாயாக. அந்த தீர்த்தத்தின் கரையில் நீ தீர்த்தத்தின் அதி தேவதையாயும் இரு. உன் உத்தரவு பெற்றே எல்லோரும் அங்கு ஸ்நானம் செய்யட்டும்.

நந்திஸ்வர் சொல்கிறார் :

இதைக்கேட்டு பூமிதேவியும், தாமரை முதலிய புஷ்பங்கள் நிறைந்ததும், கரையில் பலவித புஷ்ப மரங்களையுடையதும் எல்லாவித லக்ஷணங்களும் பொருந்தியதுமான ஒரு குளத்தை விஸ்வகர்மாவின் மூலம் நிர்மாணிக்க செய்தாள். கங்கை மற்றும் பூமியிலுள்ள ஸகல தீர்த்தங்களும் அங்கு வந்து கலந்தன். பூமி தேவியும் அதில் ஸ்நானம் செய்து ப்ருஹஸ்பதிக்கு கோதானத்தையும் தக்ஷிணையையும் கொடுத்தாள். அவரும் சந்தோஷமடைந்து, ஹே பூமியே, ப்ரம்மஹத்தி முதலிய பாபம் செய்தவர்களின் தோஷமும், சாப்பிடக் கூடாதவைகளை சாப்பிட்டவர்களின் தோஷமும், போகக்கூடாத இடங்களுக்கு போனவர்களின் தோஷமும் உனக்கு ஒரு போதும் இல்லை என்று கூறிவிட்டு பசுவுடனும் மற்ற தேவர்களுடனும் கூட ஸ்வர்கம் சென்றார்.

பிறகு பூமி தேவியும், ஸ்த்ரீகள் லிங்க மூர்த்தியைத் தொடக்கூடாது என்றெண்ணி, ஒரு சிறந்த ப்ராம்மணரைக் கொண்டு, அர்ச்சனை பூஜை முதலியவைகளை செய்வித்து, தான்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

புஷ்பம் ஜலம் முதலியவைகளை கொணர்ந்து கொடுப்பதன் மூலம் சிச்ருஷை மட்டும் செய்தாள்.

மஹாமண்டபத்திலேயே நின்று கொண்டு உமையும் ஈஸனும் மகிழும் வண்ணம் ஸ்தோத்ரம் செய்தாள். பூஜா காலங்களில், தேவதுந்துபிகள் முழங்கின. கந்தர்வர்கள் கானம் செய்தனர். அப்ஸரஸ்கள் நடன மாடினர். முனிவர்கள் ஸ்தோத்ரம் செய்தனர். இந்த்ரன் முதலிய 8 திக்குகளின் காவலர்களும் தேவர்களும் வந்துகுழுமினர்.அந்ததிக்பாலர்கள் எண்மரும் 8 திக்குகளிலும் விதிப்படி லிங்கங்களை ஸ்தாபித்து தங்களின் ஸ்திரத்தன்மையை வேண்டி பூஜித்தார்கள். விஸ்வகர்மாவும் இந்த பூமி க்ஷேத்ரத்திற்கு மேற்கே 5 மைல் தூரத்தில், ஸித்தேஸர் என்ற லிங்கத்தையும், அந்த லிங்கத்திற்கு வடக்கே ஸித்ததீர்த்தம் எனப்பட்ட தீர்த்தத்தையும் ஸ்தாபித்து 'நான் ஸித்தனானேன்' என்று மகிழ்ந்து பக்தியுடன் பூஜித்தார். அந்த லிங்கத்திலிருந்து 3 அம்பு விழும் தூரத்தில் திக்பாலர்களால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கங்கள் உள்ளன. இந்த பூமி தீர்த்தத்தில் ஆனி மாத கேட்டை நக்ஷத்திரத்தில் ஸ்நானம் செய்தால் தேவதன்மையும் இந்த்ர பதவியும் கிடைக்கும். பித்ருக்கள் பாவம் நீங்கி ஸ்வர்க்கத்தை அடைவர் இங்கு ஸ்நானம் செய்து சக்திக்கு தக்கபடி தங்கத்தை தானம் செய்ய 1000 அக்னிஷ்டோமம் செய்த பலனும், 1 பலம் தங்கம் தானத்தால், த்வாதஸாஹ யாகம் செய்த பலனும், 2 பலம் தங்கம் தானத்தால், வாஜபேய யாகத்தின் பலனும் 10 பலம் தங்கத்தால், புண்டரீக யாக பலனும், க்ஷத்ரியனானவன் 100பலம் தங்கத்தை தானம் செய்ய ராஜஸூய யாக பலனும் 1000 பலம் தங்கத்தை தானம் செய்ய அஸ்வமேத யாகம் செய்த பலனும் நிச்சயம் கிடைக்கும். பூமியின் ஸாரமான இத்தலத்தை யாராலும் வர்ணிக்க முடியாது. இந்த உமா மஹேஸரின் எதிரில் ஒரு ஸம்ஸாரியான வேதமறிந்த ப்ராம்மணரிடம் ஒரு பசுவின் காதளவுள்ள பூமியை தானம் செய்பவன் எல்லா உலகங்களையும் அடைகிறான்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

ஒரு ஏழை ப்ராம்மணனுயிருந்தாலும் வேறு ஒருவரிடம் பசுக்காதளவுள்ள பூமியை யாசகம் பெற்று அதை இந்த ஈஸனெதிரில் வந்து வேறு ஒருவரிடம் தானம் செய்தால் அவன் ப்ரம்மலோகத்தையே அடைகிருன்.

அக்னி முதலான திக்பாலர்களின் லிங்கங்களைப் பூஜிப் பவன் அந்தந்த மூர்த்திகளின் ரூபத்தை அடைந்து ஸுகம் அடைவான். 10,000 ஆண்டுகளுக்குப் பின்பும் சிவனிடத்தி லேயே லயமடைவான். ரஹஸ்யமான இந்த கதை யாருக் கும் சொல்லத்தக்கதல்ல. ஸம்ஸாரத்திற்கு மருந்தாய் விளங் கும் இந்தக் கதையைப் படிப்பவன் ஸம்ஸாரபந்தத்திலிருந் தும் விடுபடுகிருன் என்று சொல்லி நிறுத்தினர்.

மூன்றும் அத்தியாயம்

ஸநத்குமாரர் கேட்கிறர் :

''பேச்சாளர்களுக்குள் சிறந்தவரே, பசுவின் காதளவுள்ள பூமியின் தானத்தால் தரித்திரனனவன் எவ்விதம் ப்ரம்ம லோகத்தை அடைவான்? பசுக்காதளவு என்பது எவ்வளவு? இதுவும் இன்னும் எனக்கு கேட்கத் தெரியாத பல மஹிமை களையும் நீங்கள்தான் எனக்கு சொல்லவேண்டும். உமது முகத்தாமரையிலிருந்து பெருகும் அமிருதம் போன்ற கதையைப் பருகும் எனக்கு தாகம் மேலும் விருத்தியாகிறது. எந்த ஸ்தோத்ரத்தால் பூமிதேவிக்கு ஈஸன் மகிழ்ந்து வரங் களை அளித்தாரோ அந்த ஸ்தோத்ரத்தையும் கேட்க விரும்பு கிறேன்'' என்று கேட்டஸநத்குமாரரை ச்லாகித்து, நந்தீஸர் பிரீதியுடன் சொன்னர்.

''பூமியிலும் தேவலோகத்திலும் மிகவும் பாக்யம் செய்த வர்களுக்கு தான் புண்யமான சிவகதையை கேட்க விருப்பம் உண்டாகும். விபூதி ருத்ராக்ஷம் தரித்து நல்லோருடன் கூடி 5 எழுத்தை ஓதுகிறவர்களுக்கே சிவபக்தி உண்டாகும். பிறவி எடுத்ததற்கான காரியங்கள் எதையுமே செய்யாமல், வைதீக மார்க்கத்தை விட்டு, தாய் தந்தையரை தூற்றி, தன் ஆசாரத்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

தையும் விட்டு வேதத்தையும், தர்மத்தையும் அவதூறு சொல்லி பிறர்மதங்களைப் புகழ்ந்து, உண்ணத்தகாதவைகளை உண்டு ஜீவிக்கிறவர்களுக்கு ஒரு நாளும் சிவபக்தி உண்டாகாது. ப்ரம்மாவின் புத்ரரும் கல்மஷமில்லாதவருமான நீங்கள் மிகவும் பாக்யவான். சிவபெருமான் உத்தரவுடன் என் குருவை நினைத்து வணங்கி பூமிஸ்தலத்தின் மகிமையைசொல்கிறேன். ஆசையுடனே ஆசையின்றியோ ஒருவன் சிவ மஹிமையைப் பேசுவானுகில் அதன் பலனை சிவனே அறிவார்.

கங்கையின் பரிசுத்தமான தென்கரையில் தர்மபுரம் என்றொரு பெரிய ஊர் இருந்தது. அதில் அதிதிகளை உபசரித்துக் கொண்டு வேதங்களில் சிறந்தவரான தர்ம சர்மா என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சமயம் கொடுக்கக் கூடாததைதானம் கொடுத்த தோஷத்தால் தரித்ரனுகி அநேக குழந்தைகளுடன். பசியோடும், துக்கத்தோடும் ஊர் ஊராகச் சுற்றிக் காலம் கழித்தார். அப்போது ஒரு பகலில் அவர் வேறொருவரின் வீட்டில் தங்கியிருந்தபோது விதிவசமாக நாரதர் வந்து அவ்வீட்டு வாசலில் நின்றார். அந்த தர்மசர்மாவும் நாரதரைக் கண்டு அதிதி பூஜையாக காய்கறிகளை அவருக்கு கொடுத்தார். நாரதர் அதையேற்றுக் கொண்டு 'உமது வீடு வயல் எல்லாம் செளக்கியமா' என்று விசாரித்தார். அவரும், உங்களை தரிசித்ததன்பயனுக இனிமேல்தான் எனக்கு வீடும், வயலும் ஏற்பட வேண்டும். இதுவரை பிறர் வீட்டில் தான் நான் வசிக்கிறேன். ஏன் இப்படிக் கேட்கிறீர்? வந்த வழியாக போய்ச் சேரும்' என்று கூறினார். இதைக் கேட்டு கருணையோடு ''ஏ தர்ம சர்மாவே, என் வார்த்தையைக் கேள். நான்தான் நாரதர். உன் வீட்டில் சாப்பிட்டதால் உனக்கு அனுக்ரஹம் செய்யவே சொல்கிறேன். நீ காய்கறியை மட்டும் எனக்கு கொடுத்ததிலிருந்தே உன் நிலைமை முழுவதையும் அறிந்தேன். அப்படியும் நீ மௌனமாய் இருந்தமையால் உன் மனதை அறியும் பொருட்டு 'உன் வீடும் வயலும் சுகமா' எனக் கேட்டேன். நீ உண்மையே பேசியதால் மகிழ்ந்தேன். மிருந்தாதா என்றொரு அரசர் ப்ராம்மண விச்வாசமுள்ளவராயும் ப்ரியமாய் பேசுகிறவராயும் இருக்கிறார், நீ அவரிடம் சென்று

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

கேட்டால் கொஞ்சம் நிலம் கொடுப்பார். நீ அதைப் பெற்று காவிரியின் தென்கரையில், தேஜஸ்வினவனநாதரின் வாயு திக்கில் ½ யோஜனை தூரத்தில் உள்ள பத்ராஸ்வத்த வனம் என்னும் இடத்தை அடைந்து, அங்குள்ள ஒரு ப்ராம்மணரிடம் அந்த பூமியை தானம் செய். நீ பாக்கியவானாவாய் நிச்சயம். தேவர் களின் மேல் ஆணை. சந்தேஹமில்லை. நானும் உன்னுடன் வருகிறேன்'' என்று சொல்லி, அவருடன் ராஜாவிடம் சென்று ஸ்தோத்தரித்து அவர் ஆசனத்தருகில் நின்றார். ராஜாவும் நாரதரை வணங்கி, வந்த காரணத்தை அறிந்து பசுவின் காதளவுள்ள பூமியை அந்த தேவ சர்மாவுக்கு கொடுத்தார்.

''பசுவின் காதளவு என்பது 100 பாரம் தான்யம் விளையக் கூடிய இடம் என்று மனு சொல்கிறார். இதையே கோகர்ண ப்ரமாணம் என்பர்'' என்று ராஜா சொல்லி அந்த தர்மசர்மா வுக்கு கோகர்ண அளவு பூமியுடன் அதிக அளவு பணத்தையும் கொடுத்து ராஜா சந்தோஷிக்க செய்தார். அந்த தர்மசர்மா வும் அந்த நிலத்தைப் பெற்று இத்தலத்தில் வந்து ஒரு அந்தணரிடம் தானம் செய்து பெரும் பயனை அடைந்தார்.

பூமி தான பலனை சொல்லி முடியாது. காய்கறியை மட்டும் நாரதரிடம் கொடுத்ததாலேயே தர்ம சர்மா அநேக போகங்களை அனுபவித்து பூமியில் வெகுகாலம் ஸுகமாக வாழ்ந்தார். பூமிதானம் செய்கிறவன் மோக்ஷத்தை அடை கிறான். ப்ரம்ம லோகத்தை அடைந்து சிவகணமாகிறான். நல்லவரிடத்தில் கொடுக்கப்பட்ட அன்னமோ, ஜலமோ, பூமி யோ, அக்ஷயமான பலனைக்கொடுக்கிறது. மிகுந்த புண்யத்தை யும், பாக்கியத்தையும், ஸௌபாக்யத்தையும் கொடுக்கக் கூடிய இந்த க்ஷேத்ரத்தில் உள்ள ஒரு மண்ணுங்கட்டியை எடுத்து வேறிடத்தில் வைத்து ஒருவர் பூஜித்தால் லிங்கத் தையே பூஜித்த பலனை அடைவார். வேறு தலங்களில் கோடி லிங்கங்களைப் பூஜிப்பதும் இத்தலத்தில் ஒரு லிங்கத்தைப் பூஜிப்பதும் ஸமம். இங்கு ½ க்ஷண நேரம் வஸிக்க போக மோக்ஷங்கள் உண்டாகும். வைகாசி மாதத்தில் இங்கு ஒருவன் ஸ்நானம் ஜபம் செய்து தேவ பூஜையும் அன்ன தான

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

தானங்களும் செய்வானுகில் தன்னுடைய கோடிகுலங்களுடன் சாச்வதமான பதத்தை அடைவான். இத்தலத்தில் பூமியோ, வீடோ, ஒரு கையளவு அன்னமோ தானம் செய்ய கைலாச பதவி கிடைக்கும். குடை, பாதரக்ஷை தாம்பூலம் இவைகளை இந்த ஈஸனின் முன்பு தானம் செய்தால் சிவனின் ஸமீபத்தை அடைவார்கள். மிகவும் விசித்ரமானதும், கலி தோஷத்தை நீக்குவதுமான இந்த கதையைப் படிப்பவர்கள் கேட்பவர்கள் தேவர்களால் பூஜிக்கப்பட்டு சிவனுகவே ஆகி கைலாஸ மலை யின் உச்சியில் வசிப்பார்கள்.

நான்காம் அத்தியாயம்

ஸனத்குமாரர் கேட்கிறார் :

எந்த ''ஸ்தோத்ரத்தை படித்த மாத்திரத்தில் சிவன் தானுகவே சந்தோஷமடைகிறாரோ, சிவஞானத்தைக் கொடுக் கிறதும், பூமி தேவியால் செய்யப்பட்டதுமான அந்த ஸ்தோத் ரத்தை இப்போது சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

ப்ரயாண காலத்திலும், யுத்த காலத்திலும், ஜ்வரம் முதலிய நோய் வந்த காலங்களிலும், வயிற்று வலியிலும், கெட்டகாலங்களிலும், பந்துக்களால் கைவிடப்பட்ட காலத்தி லும், க்ரஹங்களின் பீடா காலங்களிலும் 'சிவதுஷ்டிகர ஸ்தோத்ரம்' எனப்படும் உலகில்சிறந்த இந்த ஸ்தோத்ரத்தை ஜபித்தால் நிமிஷ நேரத்தில் எல்லா உபத்ரவங்களும் நீங்கி விடும்; பந்த பாசங்களில் தவிக்கிறவன் இந்த ஸ்தோத்ரத்தை இடைவிடாது ஜபிக்க வேண்டும். (இந்த ஸ்தோத்ரத்திற்கு ரிஷி: சங்கரர்; தேவதை; மஹாசக்தி; மேதினீ; கீலகம்: நவ சக்திகள் சப்தஸ்: த்ருஷ்டு எனப்படுகிறது. இந்த ஸ்தோத்ரம் இஷ்டங்களை அடைய ஜபிக்கப்படுகிறது).

த்யான ச்லோகம்

மரகத மணி தேஜா மானவீ லோக பூஜ்யா
4
ஸகல புவன ரக்ஷாகாரிணீ சாந்த மூர்த்தி:।
3 4
ஸ்தவமிதம் அயி சம்போரக்ரத: கீர்த்ய பஸ்சாத்
4
முனிவர ஜனஸங்கை: துஷ்டிம் இஷ்டாமவாப॥

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

(இதன் பொருள்) மரகதப் பச்சைபோல் காந்தியுள்ள வளும் மனிதர்களால் பூஜிக்கத் தக்கவளும் எல்லா உலகையும் காப்பவளும் அமைதியே உருவானவளுமான பூமி தேவி யானவள் இந்த ஸ்துதியை முனிஜனங்களுடன் கூட ஈஸனின் எதிரில் பாடி இஷ்டமான வரத்தை அடைந்தாள்.
இனி அந்த ஸ்தோத்ரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. நமோ நமஸ்தே ஜகதீஸ்வராய சிவாய
லோகஸ்ய ஹிதாய சம்பவே ।
அபார ஸம்ஸார ஸமுத்தராய
நமோநமஸ்தே ப்ருதிவீஸ்வராய ॥

2. விஸ்வாதிகாய அதிவிமானகாய ஸோமாய
ஸோமார்த விபூஷணாய ।
ஸ்ரீகாளகண்டாய க்ருபாகராய
நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய॥

3. ஆஸாம்பராய அம்பர வர்ஜிதாய
திகம்பராய அம்பிகாய யுதாய ।
குணத்ரயாத்யைः அபவர்ஜிதாய
நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய॥

4. மாயா விகாராதி விவர்ஜிதாய
மாயாதிரூடாய தபஸ்திதாய ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

கலாதிரூடாய கபர்தினே ச

நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய ॥

5. கபாலினே காம விவர்ஜிதாய

கதம்ப மாலா கலிதாய பூம்னே ।

நிரஞ்சனயாமித தேஜஸே ச

நமோ நமஸ்தே ப்ருதிவீஸ்வராய ॥

இவ்வாறு பூமிதேவி, பரமேஸ்வரனை ஸ்தோத்தரித்து ஆனந்த கண்ணீர் பெருக நின்றாள். அவள் எதிரில் பகவானும் கோடி சூர்யப்ரகாசராயும், கோடி சந்த்ரனின் குளுமையுடனும், திவ்யமான சந்தனம், மாலை இவைகளுடனும், ஆதிசேஷன் முதலான பாம்புகளால் சுற்றப்பட்ட உடலுடனும், இடது பாகத்தில் தேவியுடனும், தன் கணங்களுடனும் கூட ப்ரத்யக்ஷ மானார். அவள் ஸ்தோத்ரம் முடிந்தபின் அவர் பேச ஆரம் பித்தார். 'ஹே பூமி, நான் மகிழ்ந்தேன். நீ இஷ்டமான வரத் தைக் கேள்' என்றார். அதைக் கேட்டு கைகூப்பி, பயந்த மன துடன் பூமிதேவி நாத் தழதழக்கப் பேசினாள். "ஹே! தேவ தேவரே, உம்மைத் தரிசித்த பின் வேறு என்ன வரம் வேண் டும்? உமது பாதங்களில் எனக்கு அசையாத பக்தியைக் கொடுங்கள். அதனால் என் கார்யங்கள் எல்லாம் கைகூடும். ஸந்தேகமில்லை, இப்போது எனக்கு காக்ஷி கொடுத்த இந்த கோலத்தில் நீங்கள் உமையுடன் கூட இந்தத் தலத்தில் விளங்க வேண்டும். இங்கு வசிக்கும் எல்லோருக்கும் கடைசி காலத்தில் ஐந்தெழுத்தை காதில் ஓதுங்கள். அவர்களுக்கு எல்லா செல்வத்தையும் கொடுத்து அனுபவிக்க செய்து கடைசி யில் உங்களது பதத்தை அடையச் செய்யுங்கள். ஸ்திரமாய் இருக்கும் என் தீர்த்தத்தில் (இது தான் காளவாய் குட்டை என வழங்குகிறது.) ஸ்நானம் செய்யும் அனைவருக்கும் எல்லா காரியங்களும் கைகூடட்டும்.' என வேண்டி நின்றாள்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

பரமேஸரும் அவளுக்கு இஷ்டமான வரங்களைக் கொடுத்து விட்டு அந்த லிங்கத்திற்குள் மறைந்தார். பூமியும் இத்தலத்திலுள்ளவர்களுக்கு கீழ்காணும் வரங்களை அளித்தாள் ஈசனுக்கு திவ்யமான ஆபரணங்களையும் இரண்டு கோடி பணத்தையும் கொடுத்தாள்.

அவளால் ஈசனின் தீபாராதனைக்காக இயற்றப்பட்டதும் இரவிலும் சூரியனின் காந்தியை உடையதும், குபேரனால் முன்பு ஈசனுக்கு கொடுக்கப்பட்ட ரச்மிமான், ஜ்யோதிஷ்மான், தீப்திமான், கிரணவளி, ஸுகப்ரதம் எனப்படும் ஐந்து விதரத்னங்களைப் போன்ற 5 ஸ்லோகங்களையுடையதுமான அந்த பஞ்சரத்ன ஸ்தோத்திரத்தை காலையில் ஸ்நானம் செய்து பலாச மரப்பலகையில் அமர்ந்து ½ மாதமோ, ஒரு மாதமோ தினமும் 1008 தடவை ஜபித்தவன், புகழும், நீண்ட ஆயுளும் உள்ள பிள்ளைகளைப்பெறுவான். வைகாசி மாதம் முழுவதும் பூமி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இத்துதியை 108 முறை ஜபித்து பித்தளைப் பாத்திரத்தில் பாயஸத்தை தக்ஷிணையோடு தானம் செய்தால் வயிற்றுவலி நீங்கும். 6 மாதங்கள் ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்து இத்துதியைப் படிக்க 18 விதமான குஷ்ட ரோகங்களிலிருந்தும் விடுபடுவார்கள். ஒரு வருட காலம் ஈசனுக்கு அபிஷேகம் செய்வித்து நியமமாக இத்துதியைப் படிப்பவர்களுக்கு அபஸ்மார நோய் (வலிப்பு நோய்) அகலும். 1 மாதம் படித்தாலேயே ப்ரம்மராக்ஷச தோஷம் நீங்கும். தனம், கல்வி, காமம், மோக்ஷம் எல்லாம் கிடைக்கும். மூன்று வேளையும் அலுப்பில்லாமல் இத்துதியைப் படிப்பவர்களால் அடைய முடியாத பேறு ஒன்றுமில்லை. இந்த துதிக்கு சமம் உலகில் இல்லை. அதிகம் சொல்வானேன்? இந்ததுதிக்கு சமமானது வேருன்று உள்ளது என்று சொல்பவன் ஊமையாகி விடுவான். இதை ஈசனின் சந்நிதியில் படித்தால் வேதபாராயணம் செய்த பலன் உண்டாகும். இத்துதியை முதலில் ப்ருஹஸ்பதி ஏற்றுக் கொண்டு பிறகு அவருடைய சிஷ்யர்களான கண்வர் முதலியவர்களுக்குச் சொன்னார். இப்படி பரம்பரையாக வந்துள்ள இதைப் படிப்பவர்களுக்கு எல்லா சித்திகளும் கைமேல் உள்ளது. இதை தங்கம் அல்லது வெள்ளி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

அல்லது செப்புத் தகட்டிலாவது அல்லது அரசமர இலையிலாவது எழுதி கையில் கட்டிக் கொள்பவர்களிடம் எல்லோரும் பயப்படுவர். பணிந்து நடப்பர். இதை புஸ்தகத்தில் எழுதி பூஜை செய்தால் அவ்விடம் பூமீஸ்வர க்ஷேத்ரம் ஆகிறது. இவ்விதமாக பூமிதேவி வரமளித்து, சிவபெருமானின் அருளும், அனுமதியும் பெற்றுதன் உருவத்தை அடைந்தாள்'. என்று நந்தீஸர் கூறக்கேட்டு மகிழ்ந்த ஸநத்குமாரர் மேலும் கேட்கிறார்.

ஐந்தாம் அத்தியாயம்

ஹே நந்தீசரே! இத்தலத்தில் எத்தனை தீர்த்தங்கள் உள்ளன? இங்கு ஸ்நானம் செய்தவர்களின் பலன் என்ன? இங்கு வசிப்பவர்கள் யார்? என்று கேட்டார்.

நந்தீஸர் சொல்கிறார் :

நீங்கள் இவ்விதம் கேட்டதால் நான் மிகவும் கொடுத்து வைத்தவனானேன். சொல்கிறேன். கேளுங்கள். சிவனுடைய ஆனந்த தாண்டவத்தை தரிசிக்க விரும்பி கௌதமர் முதலான மகரிஷிகள் முன்னொரு காலத்தில் இந்த பத்ராஸ்வத்த வனத்தை அடைந்து தபஸ் செய்தார்கள். அசரீரி வாக்கினால் ஈசனின் வரவும் ஒரு காலத்தில் நிகழப் போகிறது என்பதை அறிந்தவர்களும், பத்னிகளுடன் தினமும் அக்னிதேவனை பூஜிக்கிறவர்களுமான அந்த 3000 ரிஷிகளுக்குள் கௌதமர் முதன்மையாய்விளங்கினார். ஒரு சமயம் அவர் மற்ற முனிவர்களுடன்கூட சிவனின் தாண்டவத்தைக்காண ஆவல் கொண்டவராய் முறைப்படி சிவனின் ஐந்தெழுத்தை அந்த அரசமரத்தடியில் ஓதலுற்றார். அந்த மரத்தடியில் செய்யப்படும் ஒரு ஜபம் கோடி பங்காக பலன் கொடுக்கும்.

ஸநத்குமாரர் கேட்கிறார் :-

'ஐந்தெழுத்தை ஓதுமுறையும், பலனும், அதிலுள்ள பல மாறுபாடுகளும் முன்பே ப்ரும்ம லோகத்தில் என்னால் கேட்கப்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

பட்டது. அதில் எத்தனை மாறுபாடுகள் உள்ளனவென்று கூறுங்கள்' என்றார்.

நந்தீசர் சொல்கிறார் :–

கலங்காத மனதுடன் கேளுங்கள். சொல்கிறேன். மாறுபாடுகள் இவ்வளவுதான் என யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. அதை சிவனும், தேவியும், மஹாவிஷ்ணுவும். லக்ஷ்மியும், உமது குருவும், எனது குருவும், பூமி தேவியுமே அறிவார்கள். பூமி தேவிக்கு மஹா விஷ்ணுவினால் உபதேசிக்கப்பட்டது. மனுஷ்யர்கள், ப்ரம்ம, க்ஷத்திரிய, வைச்ய, சூத்ர என்று நால்வகைப் படுவார்கள். இவை முக்யமான வேறுபாடு அதில் பிராமணர்களுக்குள் 1000 வகையும், ராஜாக்களுக்குள் 1000 வகையும், வைச்யர்களுக்குள் 500 வகையும், சூத்ரர்களுக்குள் 300 வகையும் உள்ளன. இவைகள் ஸ்தூல பேதங்கள் எனப்படும். அதில் பிராமணர்களில் உள்ள ஸம்சாரிகளுக்கும், முனிவர்களுக்கும், சந்யாசிகளுக்கும் ஞானத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கக் கூடியதாக யஜுர் வேதத்தில் நம : என்ற சொல்லே முதலாயுடைய இந்த மந்திரம் உள்ளது. அதை யோகிகளும், முனிவர்களும் பலவிதமாக சொல்கின்றனர். ஓம் என்று முதலில் சொல்லி, பின்பு நம : என சொல்லி பிறகு சிவாய என்று சொல்வது ஷடாக்ஷரம் எனப்படும். ராஜவம்சத்தவர்களுக்கு இதில் சில மாறுதல்கள் உண்டு. வைச்யர்களும், சூத்ரர்களும் நல்ல குருவிடம் உபதேசம் பெற்று ப்ராயசித்தத்துடன் இம்மந்திரத்தை ஜபித்தால் பிறவிப்பயனை அடைவார்கள். ஸந்தேகமில்லை.

யாருடைய ஹ்ருதயத்தில் சிவனின் 5 எழுத்து மந்திரம் உள்ளதோ அவனுடை ஹ்ருதயம் கோயிலாகவும், அந்த மந்த்ரம் சிவலிங்கமாகவும் ஆகிறது. அநேக பிறவிகளில் செய்த புண்யத்தாலேயே இம்மந்த்ரம் கிடைக்கும். சண்டாளனே வேறு எந்த பாபம் செய்தவனே ஆயினும் இதயத்தில் சிவமந்த்ரம் இருக்குமாயின் அவன் 4 வேதங்களையும் அறிந்தவனைகிறான் 4 வேதமும் அறிந்தவனையினும் சிவமந்த்ரத்தை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

அறியாதவனுயின் அவன் சண்டாளனுகிருன். ஹே சிவ என்று ஒருவன் ஒரு முறை சொல்ல அஸ்வமேதம் செய்த பலனை அடைகிருன். உலகில் 7 கோடி மந்த்ரங்கள் இருப்பினும் சிவ என்னும் ஒரே ஒரு பதமே மஹாமந்த்ரமாகிறது. சொல்லும் பொருளும் போல சிவனும் சக்தியும் சேர்ந்தே உள்ளனர். சக்தியின்றி சிவனே சிவனின்றி சக்தியோ ஒரு போதும் இல்லை வேதங்களும், அந்தணர்களும் தக்ஷிணையுடன் கூடிய யாகமும் அக்னிஹோத்ரமும் பசுக்களும் சிவனின் ரூபமாக சொல்லப் படுகின்றன. வேதங்களும் சாஸ்திரங்களும், கோடிக்கணக் கான புஸ்தகங்களும், புராணக்கதைகளும் இந்த சிவமந்த் ரத்தின் விளக்கங்களே. இந்த மந்த்ரமானது ஹோமம் முத லிய நற்கரியங்களுக்காக ஜபிக்கப்படவேண்டும். வசியம் முத லிய கெட்ட வழிகளில் உபயோகிக்கத் தக்கதல்ல. அப்படி செய்கிறவன் நரகத்தை அடைவான். காயத்ரியும், ஐந்தெழுத் தும், காமம் மோகம் முதலிய எண்ணங்களின்றி ஈஸனுக்கு அர் பணிப்பதற்காகவே ஓதப்படவேண்டும். அப்படி ஓதுபவர் களைப் பார்த்தவர்களுக்கும் முக்தி ஏற்படும். அப்படியின்றி தன் இஷ்டத்தை அடைவதற்காக ஜபிக்கிறவன் உடனேயே நாசமடைவான். இப்படிப்பல மஹிமை பொருந்திய அவ் வுயர்ந்த மந்த்ரத்தை ஓதி, 100 ஆண்டுகள் கௌதமர் கடுந்தவம் செய்தார். அப்போது அந்த அரசமரத் திற்கு தெற்கே ஹரிச்ருதா எனப்படும் அரசலாற்றின் கரை யில் பவானி தேவியுடன் கூட அழகிய உருவுடன் பகவான் காக்ஷியளித்தார். அதைக் கண்டு வணங்கிய கௌதமர் ஆனந்த தாண்டவத்தைக் காட்டும்படி வேண்டினர். அதற்கு பகவான் பிரியத்துடன், அதற்குரிய காலம் வரட்டும். பூமி தேவியானவள் என்னை பூஜித்து வேண்டுவாள். அப்போது அவளுக்கு என் நடன கோலத்தைக் காட்டப்போகிறேன். நீங்களும் தரிசியுங்கள் என்று கூறி பவானி தேவியுடன் கூட கல்யாண ஸுந்தரர் என்ற பெயருடன் அவ்விடத்திலேயே நிலை பெற்றார். அவ்வூர் கல்யாணபுரம் எனப்பெயர் பெற்றது. பூமி தேவி வரும் வரையிலும், கௌதம முனிவர், திருநீறு உத்ராக்ஷம் அணிந்து, ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டிருக்கும்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

6000 முனிவர்களுடன் கூட ஸத்ரயாகம் எனப்படும் ஒரு யாகத்தை செய்து கொண்டிருந்தார். அதைக் காண வேதமும் புராணங்களும் அங்கு வந்து கூடின. இப்படியாக முடிவில் லாத வேதவாக்யம் போல அந்த முனிவர்களும் முடிவில்லா மல் இருந்தார்கள். இம்மந்திரத்தின் மஹிமையை சிவனே அறிவார். எல்லாம் சிவமயம் என்று இருப்பவன் சிவனுகவே ஆகிருன். இம்மந்திரத்தை ஓதிய ஒரு கிளியும் வீடுபேற்றை அடைந்துள்ளதை நான் கண்கூடாகக்கண்டேன். பிறகு மனி தரைப் பற்றி கேட்பானேன்'' என்று கூறினர்.

ஆரும் அத்தியாயம்

ஹே நந்திகேஸரே, நான் மிகவும் பாக்யசாலி. கிளி யாரிடம் உபதேசம் பெற்று சிவ மந்திரத்தை ஓதி முக்தி அடைந்தது''? சொல்லுங்கள் பக்தியுள்ள சீடரிடத்திலும், நற்குணம் பொருந்திய மகனிடத்திலும், நீதியுடன் அரசாளும் ராஜாவினிடத்திலும் குருவானவர் எதையும் மறைக்க மாட்டார். அதுபோல் என்க்கும் கேட்கத் தகுதியிருக்கு மாயின் சொல்லுங்கள். ஆசைக்கு அளவில்லை. மிகவும் அல்பமானவனும் கூட ஆசைப்படுகிருன். என் குற்றங்களைப் பொறுத்து கருணையுடன் சொல்லுங்கள்'' என்று ஸநத்குமா ரர் கேட்டார்.

நந்தீஸர் சொல்கிறர்:-

துக்கப்படாதீர்கள். நற்கதைகளை கேட்கவும் சொல்ல வும் உமக்கு ஈடானவர் எவரும் இல்லை. இந்த பூமீஸ்வரத் தலத்தில் அருள்மிகு தக்ஷிணமூர்த்தி ஸந்நிதிக்கருகில் ஞான கூபம் என்றழைக்கப்படும் ஒரு கிணறு விஸ்வகர்மாவினல் நிர்மாணிக்கப்பட்டு விளங்குகிறது. அக்கிணற்று நீரைப் பார்த்தாலும் ஆனந்த கண்ணீர் பெருக ஒரு துளியளவு அத் நீரைப் பருகினலும் ஈடில்லாத சிவஞானம் உண்டாகும். இதன் மஹிமையைக் கேட்டு கௌட தேசத்திலிருந்து வேதங் களிலும் வாதம் செய்யும் திறமை வாய்ந்த ஒரு அந்தணர் வந்தார். இக்கிணற்றைப் பார்த்ததாலேயே மிகவும் மட்ட

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

மான மனிதனும் மோக்ஷமடைகிறான் எனக் கேள்வியுற்று அதைக் கண்கூடாகக் காணும் பொருட்டு இத்தலத்தின் வட கிழக்கு திக்கில், இந்த்ரத் தீர்த்தக் கரையில் ஒரு குடிசை அமைத்துக்கொண்டு, சீடர்களோடும், மானவி மக்களுடனும் தங்கியிருந்து, காற்றையும் இலையையும் மட்டுமே உண்டு, பிறருக்கு உணவிடுதல், யாகம் முதலியவற்றைச் செய்து கொண்டு ,தேவர்களையும் முன்னோர்களையும் மகிழ்வித்து ஆசை கோபம் இவைகளை ஒழித்தவராய், தவமியற்றி வாழ்ந்து வந்தார். நாளடைவில் தினமும் அக்கிணற்று நீரை மந்திர உச்சரிப்புடன் கூடப் பருகிவந்த அவர் மிகவும் மகிழ்ந்தவராய் வீடு பேறடைந்தார். அவருக்கு ஸுமதி என்று ஓர் அழகிய பெண் இருந்தாள். அவள் தன் தோழிகளுடன் பந்தாடும் பொழுது ஒரு கிளியைக்கண்டு அதைப் பழம் முதலியவைகளைக் கொடுத்து வளர்த்து வந்தாள். அந்தக் கிளிக்கு அவள் தேனைப் புகட்டிப் பேசக் கற்றுக் கொடுத்தாள். அத்துடன் உயர்ந்த ஞானத்தை அளிக்கும் பொருட்டு அந்தக் கிளிக்கு நாள்தோறும் அக்கிணற்றின் நீரையும் சிறிதளவு ஊட்டி வந்தாள். அதனால் அக்கிளி மிகவும் ஞானமுள்ளதாகி சிவனின் மஹிமைகளைப் பாடிக் கொண்டு அவ்வீட்டில் தன் இஷ்டப்படி வஸித்து வந்தது. மேலும் அக்கிணற்றின் மஹிமையையும் அறிந்த அந்தகிளி, இத்தலத்தில்உள்ள அரசமரத்தில் வந்து அமர்ந்து ''ஏ! ஜனங்களே! இத்தலத்துக்கு வாருங்கள். இங்கு ஒரு புண்ய தீர்த்தம் உள்ளது. பறவையினமாகிய நானே அத்தீர்த்தத்தால் பெரிய ஞானியாகி விட்டேன். மனிதர்களாகிய உங்களைப் பற்றி கேட்க வேண்டுமா? சிவபக்தர்களின் வீட்டில் வசிப்பவர்களே, சிவபதவி அடைவார்களென வேதமறிந்தவர்கள் சொல்கின்றனர். முன்பிறவிப் பயனாலோ, நல்லோரின் சேர்க்கையாலோ இத்தலத்திற்கு வந்து இங்குள்ள புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, பின்பு களைப்பாறும் பொருட்டாவது இவ்வாலயத்தினுள் சென்று ஈஸனை வணங்கி வலம் வந்து, இக்கிணற்று நீரையும் துளியளவேனும் பருகுங்கள். உடனே முக்தி அடைவீர்கள். இது ஸத்தியம். மனிதகுலமே சிறப்பு, அதிலும்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

அந்தணராயின் மேலும் சிறப்பு அதற்குரிய காரியங்களைச் செய்யாது, ஸந்தியாவந்தனம் முதலியவைகளை செய்யாத வனுயினும், பயங்கரமான தானம் வாங்கியவனுயினும், தாய், தந்தை, ஆசான் இவர்களுக்கு கெடுதல் செய்தவனுயினும் குளிக்காமல் உணவு கொண்டவனுயினும், கீழ்ப்பட்டவனிடத்தில் தானம்பெற்றவனுயினும், சாயங்கால நேரத்தில்சாப்பிட்டவனுயினும், செல்லக்கூடாத இடங்களுக்கு சென்றவனுயினும், மது அருந்துபவனுயினும், தங்கத்தை திருடியவனுயினும், பெரியோர்களின் பாயில் படுத்தவனுயினும், ஸந்யாசிகளை அவமதித்தவனுயினும், குளக்கரைகளை இடித்தவனுயினும், இன்னும் நினைக்க முடியாத, சொல்ல முடியாத எழுத முடியாத பாபங்களைச் செய்தவனுயினும்இந்த ஞானகூபத்தின் நீரை ஒரு துளியளவேனும் ஓம் என்ற மந்திர உச்சரிப்புடன் சாப்பிட்டால் எல்லா பாபங்களிலிருந்தும், நரகத்திலிருந்தும் விடுபட்டு சிவனுடையஸ்தானத்தை அடைகிறுன்.தேவர்களின் மேல் ஆணை. ஸந்தேஹமில்லை!'' என்று அந்தக் கிளி ஓயாது முழங்கிற்று. அதைக் கேட்டு பலரும் முக்தி அடைந்தனர்; அதன் பிறகு வெகுகாலம் சென்று பயங்கர உருவம் கொண்டவனும், தரையில் படாத கால்களை உடையவனுமான ஒருவன் அன்ன ஆகாரமின்றி ஹா, ஹா என்று கத்திக்கொண்டு, இத்தலத்தை வந்தடைந்தான். அவனைக் கண்டு மக்கள் எல்லாம் பயந்து ஓடினர். அவன் கொஞ்சம் கொஞ்சமாக அந்த மரத்தடியை அடைந்தான்.அப்போது அந்தகிளி அவ்வீட்டிலிருந்து வெளிவந்து மேற்கண்டவாறு கூறியது.அதைக்கேட்டதாலும் அந்த ப்ரம்ம ராக்ஷஸ் அத்தலத்தின் மஹிமையாலும் தன்பயங்கர உருவம் மாறி சுயரூபத்தை அடைந்தான். அவன் ப்ரும்ம ராக்ஷஸாக மாறி 6000 ஆண்டுகள் ஆகின்றன. இவ்வண்ணம் நெடுங்காலம் சென்ற பின்னும்அவனுக்கு இத்தலத்தில் முக்தி கிடைத்துள்ளது. அவ்வமயம் நான் ஈஸனை தரிசிக்க கைலாஸத்திலிருந்து இங்கு வந்தேன். இவைகளைக் கண்கூடாகக் கண்டேன். அதை உமக்கும் சொன்னேன்'' என்று நந்தீஸர் சொன்னார். அதைக் கேட்ட ஸநத்குமாரரும் மற்றோரும் 'ஆச்சரியம், ஆச்சரியம்' என்று மறுபடியும் மறுபடியும் பலமுறை சொல்லி மகிழ்ந்தார்கள்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

ஏழாம் அத்தியாயம்

''ஹே நந்தீஸரே! சிவபெருமானின் நினைவுடன் மிகவும் புண்யமான இந்தக் கதையைக்கேட்பதால் எனக்கு சிவஞானம் உண்டாயிற்று. மேலும் கேட்க விரும்புகிறேன். எந்த தேசத் தரசன் என்னபாபத்தால் ப்ரம்மராக்ஷஸனாக ஆனான்? அவன் இத்தலத்தை அடைய எவ்விதம் முயன்றான். சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

நந்தீஸர் சொல்கிறார் :

மாளவ தேசத்தில் தர்மத்வஜன் என்ற அரசன் 4 விதசேனைகளுடனும், பிள்ளை போன்றவர்களுடனும் நீதியோடு அரசாண்டு வந்தார். அவர் தன் நக்ஷத்திரத்தில் சூர்யக்ரஹணம் ஏற்பட்ட போது, பதினாயிரம் பசுக்களையும், தான்யங்களையும், கோடிக்கணக்கான பணத்தையும் அந்தணர்களிடம் கொடுத்து சாந்தி செய்தார். எல்லாவித தானங்களும் கொடுத்து முடிந்த பின், ஓர் ஏழை அந்தணர் அங்கு வந்து தனக்கும் ஏதாவது கொடுக்கும்படிக்கேட்டார். அதற்கு அரசர் 'ஏ குற்றமற்றவரே, ஆடை அணிகலன்கள் நாற்படைகள், தானியங்கள், பணம் எல்லாவற்றையும் தானம் செய்து விட்டேன் இனி ஏதும் மீதமில்லை. நான் என் செய்வேன்? நாளைக் காலையில் அரண்மனையிலிருந்து 1000, 2000-க்கணக்கில் பணத்தைக் கொணரச்செய்து உமக்கு தருகிறேன். தற்போது ஆச்ரமத்தில் சென்று தங்குங்கள்' என்றுகூறி அவரை வணங்கினார். இதைக்கேட்டு மிகவும் கோபங் கொண்ட அந்தணர் 'ஹே அரசனே! எல்லோருக்கும் பொன்னும், பொருளும் அள்ளிக் கொடுத்த நீ எனக்கு மட்டும் இல்லை என்கிறாய் நீ ப்ரம்ம ராக்ஷஸனாக மாறக்கடவாய் என க்ரூரமாக சபித்தார். ஒருகுற்றமும்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

செய்யாத அரசன் தன்னை இவ்விதம் சபித்துவிட்டாரே என்ற கோபத்தில் 'ஒரு பாவமும் அறியாத என்னை காரணமின்றி சபித்த நீங்களும் அப்படியே ஆகுங்கள்' என்று அந்தணரைக் கோபமாக கூறிவிட்டு அரசன் ப்ரும்ம ராக்ஷஸானான். அந்த ணர் தனக்கு நேர்ந்த சாபத்தைத் தன் தவ வலிமையால் போக்கிக் கொண்டு ஊரை அடைந்தார். அரசரோ, தன் ராஜ்யத்தையும் விட்டு உடல் இளைத்து, ஆடையின்றி எல்லோ ரையும் கண்டு பயந்து, ஆகாயத்தை நோக்கி அடிக்கடி கையை ஆட்டிக்கொண்டு, காடு, மலை எல்லாம் சுற்றித் திரிந்தார். இப்படி பல காலம் சென்ற பின், முன் பிறவிப் பயனால் காற்று வாக்கில் இந்த ஸ்தலத்தை அடைந்து, கிளியால் சொல்லப் பட்ட நல்வார்த்தையையும் கேட்டு ராக்ஷஸத் தன்மை நீங்கி தன்னுருவை அடைந்தார்; பிறகு இத்தலம் வாழ் அந்தணர் களையும், தனக்கு ஆசானாய் வந்த கிளியையும் வணங்கி, இத்தலத்தில் உள்ள ப்ரம்ம; பூமி தீர்த்தங்களிலும் இவ்வூரைச் சுற்றி 8 திசைகளிலும் திசைக்காவல் புரியும் 8 தேவதைகளால் உருவாக்கப்பட்ட மற்ற தீர்த்தங்களிலும் விதி முறைகளின்படி ஸ்நானம் செய்துவிட்டு தக்ஷிணமூர்த்திக்கெதிரில் உள்ள கிணற்று நீரை ஒரு குடத்தில் எடுத்து மந்திரித்து தலையில் தெளித்துக் கொண்டு இணையற்ற ஞானத்தை அடைந்தார். பிறகு 3 மாதங்கள் சென்ற பின் அவ்வரசர் இத்தலத்து ஈஸனுக்கு தொண்டு செய்ய எண்ணி நாரதரால் சொல்லப் பட்டவராய், கோடிக்கணக்கில் பணத்தை திரட்டிக் கொண்டு 4 படைகளுடன் வந்து இங்குள்ள அரசரிடம் தன்விருப்பத்தைத் தெரிவித்தார். முக்காலமும் உணர்ந்த அந்த அரசரும் சீர் கேடான நிலையிலுள்ள அக்கோயிலின் கோபுரம் ப்ராகாரம் முதலியவைகளைப் பழுதுபார்க்கும் படி உத்தரவிட்டார். அந்த தர்மத்வஜரும் சிற்பிகளை அழைத்து ஏராளமான பொன்னையும்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

பொருளையும்கொடுத்து ஆலயத்தைமுன்னைவிட நான்குமடங்கு சிறந்த முறையில் கட்டுவித்தார். 32 கும்பங்கள் வைத்ததும், ரத்தின கற்களால் இழைக்கப்பட்டதும் எல்லா லக்ஷணங்களும் பொருந்தியதுமான பத்ரம் எனப் பெயர் கொண்ட தங்க ரதத்தை செய்து ஈஸனையும், பரிவார தேவதைகளையும், தங்கமயமான விக்ரஹங்களாக வடித்து ரதத்தில்வைத்து முறைப்படி ரத உத்ஸவத்தை நிகழ்த்தினர். வைகாசி மாத வளர் பிறையில் புனர்பூச நக்ஷத்ரம் கூடிய நன்னாளில் கொடி ஏற்றும் விழாவும் 'காமிகா' எனப்படும் ஆகம சாஸ்திரத்தில் சொல்லப்பட்டபடி 5 அந்தணர்களைக் கொண்டு ஹோமங்கள் மற்ற விதி முறைகளையும் செய்வித்தார். எல்லாவித வாத்யங்களும் முழங்க வினயகப் பெருமான் முதல் எல்லா தெய்வங்களுக்கும் விழா எடுத்து அந்தணர்களுக்கு அறு சுவை உண்டி அளித்து கோடிக்கணக்கான தான தருமங்களுடன் 10 ஆம் நாள் தீர்த்தவாரியும் நடத்தினர். தங்க ரதத்தில் தங்கமயமாகவே விளங்கும் ஈஸனை வெளியூர்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கானோர் வந்து கண்டு ஆனந்தித்தார்கள். இவ்விதம் இறைத் தொண்டு புரிவதில் ஆசையுள்ள அரசர் அன்னதானமும் உத்ஸவமும் செய்து கொண்டு புராணக்கதைகள் எல்லாம் கேட்டுக் கொண்டு இத்தலத்தில் வெகு நாள் வாழ்ந்தார். பின்பு இங்குள்ள அனைவரிடமும் உத்தரவு பெற்று தன் நாடு சென்று முக்தி பெற்றார்.

இந்த கதையை முழுதுமோ, இந்த அத்தியாயத்தை மட்டுமோ படிப்பவன் தன் குலத்தில் வந்த அனைவருடனும் அழியாத முக்தியை அடைகிறான்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

இத்தலத்தின் எட்டுதிக்குகளிலும் இத்தலத்திலுமுள்ள மூர்த்திகளும் தீர்த்தங்களும்

எண்.	இறைவன் பெயர்	இறைவி பெயர்	தீர்த்தத்தின் பெயர்	ஊரின்பெயர்	திசைகள
1.	உமாமஹேஸ்வரர்	தேஹஸௌந்தரி (அங்கவள நாயகி)	பூமி தீர்த்தம்; ப்ரம்ம தீர்த்தம்; ஞானகூபம்	கோனேரி ராஜபுரம்	நடுவில் உள்ளது
2.	நாகேஸ்வரர்	நாகவல்லி	தேவேந்த்ர ஸரஸ்	நாகம்பாடி	கிழக்கு
3.	அக்னீஸ்வரர்	கௌரீ பார்வதீ	அக்னி தீர்த்தம்	அந்நியூர்	தென்கிழக்கு
4.	ஸத்குணேஸ்வரர்	ஸர்வாங்க நாயகி	யம தீர்த்தம்	கரிவேலி	தெற்கு
5.	கார்கோடகேஸ்வரர்	மங்களாம்பிகா	நைருத தீர்த்தம்	வயலூர்	தென்மேற்கு
6.	வாருணேஸ்வரர்	ஜலமுகுள நாயகி	வருண தீர்த்தம்	சிவனூரகரம்	மேற்கு
7.	சம்பகாரண்யேஸ்வரர்	ப்ருஹன் நாயகி	வாயு தீர்த்தம்	வைகல்	வடமேற்கு
8.	குபேரேஸ்வரர்	ஸௌந்தர்ய நாயகி	ஸோம தீர்த்தம்	புதூர்	வ க்கு
9.	பசுபதீஸ்வரர்	ஸௌந்தர்ய நாயகி	ஈஸான தீர்த்தம்	நல்லாவூர்	

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

எட்டாம் அத்தியாயம்

நந்தீஸர் சொல்கிறார் :

"ஹே ஸநத்குமாரரே ! உமக்கு இதுவரை தீர்த்தங்களின் மகிமைகளைச் சொன்னேன். இனி தானம் செய்யும் விதிகளைச் சொல்கிறேன். கேட்டுப் பயனடைவீராக. இத்தலத்திலுள்ள உயர்ந்ததான பூமி தீர்த்தத்தில் வைகாசி மாத வெள்ளிக் கிழமைகளில் ஸ்நானம் செய்து சக்திக்கேற்ப தங்கத்தை தானம் செய்பவர்கள் பெரிய செல்வந்தர்களாவார்கள். ஆறு மாதங்கள் தொடர்ந்து நீராடினால் பிள்ளைபேற்றை அடைவார்கள். 3 நாட்கள் இவ்வூரில் வசிப்பவர்கள் விரும்பியதை எல்லாம் அடைவர். அமாவாசை, பௌர்ணமி, சந்த்ர, சூர்ய கிரஹணங்கள், தக்ஷிணாயண உத்ராயண புண்யகாலங்கள், மாதப் பிறப்பு மற்றும் வ்யதீபாதம் எனப்படும் புண்ணிய நாட்கள் அவரவர்களின் பிறந்த நாட்கள் ஆகிய தினங்களில் இந்த பூமிதீர்த்தத்தில் நீராடினால் பாபங்கள் எல்லாம் நீங்குகின்றன.

நாகம்பாடியில் உள்ள இந்த்ரதீர்த்தத்தில் ஆனி மாத கேட்டை நக்ஷத்திரத்தில் ஸ்நானம் செய்து சிவப்பு நிற ஆடையை தக்ஷிணையுடன் தானம் செய்தால் அக்னிஷ்டோமம் முதலிய யாகங்கள் செய்த பலனும் சந்தனக் கட்டையை தானம் செய்தால் தேவருலகமும் கிடைக்கும்.

அன்னியூரில் உள்ள அக்னி தீர்த்தத்தில் கார்த்திகை மாத க்ருத்திகை நக்ஷத்திரத்திலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் சூரியன் உதிக்கும் முன்பே நீராடி அக்னி தேவதைக்கு உரிய மந்திரம் அல்லது ஓங்கார மந்திரம் உச்சரித்துக் கொண்டு விறகு, நெய் இவைகளை தானம் செய்தால் கண் நோய்களும் கெட்டவைகளை உண்டதால் உண்டான பாபங்களும் நீங்கும். அரச பதவி கிட்டும்.

கரிவேலியில் உள்ள யம தீர்த்தத்தில் 'இமம் யம' எனும் வேதமந்திரத்தை சொல்லி, ஒவ்வொரு மாதமும் பரணி நக்ஷத்திரத்தில் நீராடி சக்திக்கு தக்கபடி நீலநிற ஆடை, எள்,

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

அம்பளி இவைகளில் ஏதேனும் ஒன்றை தானம் செய்தால், மரணத் துன்பமே உண்டாகாது. அவர்களின் வம்சத்தவர்கள் கூட யமனுலகிற்கோ, நரகத்திற்கோ செல்லமாட்டார்கள்.

வயலூரில் உள்ள நிருதி தீர்த்தத்தில் சித்திரைமாத புதன் கிழமைகளில் 'ஓம்' என்று உச்சரித்துக் கொண்டே நீராடி, பல வித பூக்கள் உள்ள ஆடையை தானம் செய்தால், கெட்ட கனவுகளின் பலனும், எல்லா பாபங்களும் நீங்கி விரும்பியதை எல்லாம் அடைவார்கள். இது சத்தியம்.

சிவனுரகரத்திலுள்ள வருண தீர்த்தத்தில் ஐப்பசி மாதம் முழுதும் வெள்ளிக் கிழமைகளிலும் வருண தேவரின் மந்திரத்தை சொல்லி ஸ்நானம் செய்து, ஈர ஆடையையோ, நீர் நிரம்பிய பாத்திரத்தையோ, இரண்டு ஆடைகளையோ தானம் செய்து, நிறைய அன்னதானமும் செய்பவர்கள் மிக உயர்ந்த குதிரையில் ஏறி ப்ரம்மலோகம் செல்வார்கள், இந்த்ரனின் பதவியும் இவர்களுக்கு கிடைக்கும். வைகலில் உள்ள வாயு தீர்த்தத்தில் 'தவ வாய' எனும் வேத மந்திரத்துடன் நீராடி, ஸ்வாதி நக்ஷத்ரங்களில் பனை மரங்களை தானம் செய்பவர்கள் ப்ராஜாயாமம் முதலிய தன் கடமைகளைச் செய்யாதவர்களாயினும் இதன் மஹிமையால் புனிதமடைந்து, வாயு லோகத்தையும், ப்ரம்ம லோகத்தையும் அடைவார்கள்.

புதூரில் உள்ள ஸோம தீர்த்தத்தில் 'ஸோமோதேனும்' என்னும் மந்திரத்தையும் ஓம்காரத்தையும் உச்சரித்துக் கொண்டு மாசி மாதத்தில் ஸ்நானம் செய்து சக்திக்கு தக்கபடி தங்கத்தை தானம்செய்தால் குபேரனைப்போல் செல்வந்தராகி குபேரபட்டினத்தை அடைந்து அங்கிருந்து ப்ரும்மலோகத்தையும் அடைவார்கள். ஸந்தேகமில்லை.

நல்லாவூரில் உள்ள ஈஸான தீர்த்தத்தில் 'கத்ருத்ராய' என்னும் மந்திரத்தை உச்சரித்து, மார்கழி மாத அமாவாசையில் நீராடி, வெள்ளி அல்லது எள்ளுடன் கூடிய பாத்திரத்தை தானம் செய்தால் எல்லா சௌக்கியங்களையும் அடைந்து பித்ருக்களின் உலகை அடைவார்கள்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

இத்தலத்தில் உமாமஹேஸ்வரரின் எதிராக உள்ளதும் சிறந்த அந்தணர்களால் உருவாக்கப்பட்டதுமான ப்ரம்ம தீர்த்தத்தில் எந்தக் காலத்திலும் எந்தவிதமான விதிப்படியும் நீராடி அவரவர்களுக்கு விருப்பமான பொருளை தானம் செய்ய எல்லாவற்றையும் அடைவர். இக்குளத்தின் நாற்றிசையிலும் உள்ள கரைகளில் முன்னோர்களுக்கு ச்ராத்தம் செய்பவர்களின் குலத்தோரெல்லாம் ப்ரம்மலோகம் செல்வார்கள். கார்த்திகை மாத திங்கட்கிழமைகளில் நீராடி சக்திக்கேற்ப தானம் செய்பவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். தை மாதத்தில் நடுப்பகலில் நீராடுபவர்களின் பிறவி பயனுள்ளதாகிறது. இங்கு ஒரு அணுவளவு செய்யும் தானமே கோடி பங்காகப் பலனளிக்கிறது. இத்தலத்தில் உறையும் ஈஸனுக்கு அமாவாஸை, பௌர்ணமி தினங்களில் அபிஷேகம் செய்பவரால் அடைய முடியாதது ஒன்றுமில்லை. பங்குனி மாதம் முதல் ஆடி மாதம்வரை இவ்வூரில் தண்ணீர் பந்தல் வைத்து குளிர்ந்த நீரைக் கொடுத்தால் எல்லாவித வாசனாதி திரவியங்களாலும் ஈஸனுக்கு அபிஷேகம் செய்த பலன் பெற்று கெட்டவர்களின் சேர்க்கையிலிருந்தும் விடுபட்டு மோக்ஷமடைகிறான். இவ்வாலயத்தில் ஒரு விளக்கை ஏற்றினால் மஹாதீபம் ஏற்றிய பலனும், 2 ஆழாக்கு அன்னத்தை நிவேதனம் செய்தால் மிகப் பெரிய அளவில் நிவேதனம் செய்த பலனும் பெறுகிறார்கள். இந்த ஈசனுக்கு சாம்பிராணி தூபம் காட்டியவர்கள் பற்பல பிறவியிலும் பரிசுத்தம் அடைந்து விடுவார்கள். ஸந்தேஹமில்லை. எட்டு லிங்கங்களால் சூழப்பட்ட உமாமஹேசரை ஒருமுறை வலம் வந்தால் பூமி முழுவதையும் வலம் வந்த பலன் கிடைக்கும். இந்த ஈசனுக்கு ஒருவன் மூன்று நாட்கள் நீலோத்பலம் என்ற பூவினால் கட்டப்பட்ட மாலையை சூட்டுவானையின் அவன், அம்மாலையிலுள்ள பூக்களின் எண்ணிக்கை எவ்வளவோ அத்தனை ஆண்டுகள் சிவலோகத்தில் வசிப்பான். விரும்பியோ, விரும்பாமலோ இத்தலத்தில் ஒரு மாதம் வசிப்பவன் சிவபெருமானின் கூடவே வஸிப்பான். இவ்வாலயத்தில் அதிகாலையிலும், மாலையிலும் ஊதப்படும் சங்கு வாத்யத்தின் ஒலியை தொலைவிலிருந்து கேட்பவன் கூட பாபம் நீங்கப் பெற்றவனாய் எல்லா இன்பத்தையும் அடைகிறான்.''

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

ஒன்பதாம் அத்தியாயம்

அமாவாசை தோறும் ப்ரம்ம தீர்த்தத்தில் நீராடி அரிசி, பருப்பு முதலியவைகளை தானம் செய்தால் பாபங்கள் நீங்கி சிவலோகத்தை அடைகிறான், வைகாசி மாதம் முழுவதும் சூரியன் உதிக்கும் முன்பும். திங்கள், வெள்ளிக்கிழமைகளிலும் சூர்ய சந்திர க்ரஹணங்களிலும், பிறந்த நாளிலும் இக்குளத்தில் நீராடி உமாமஹேஸ்வரை தரிசித்து, ஞானக்கிணற்று நீரையும் பருகினால் எல்லா பாபங்களும் விலகும். உமாமஹேஸ்வருக்கு, எண்ணெய், பால், தயிர், நெய், இளநீர், பஞ்சாமிருதம் முதலியவைகளால் அபிஷேகம் செய்து வணங்குபவன் எல்லாப் பேறும் பெற்று முக்தியடைவான். இத்தலத்தில் ஒரு அந்தணருக்கு அன்னமிடுபவன் காசியில் கோடி அந்தணர்களுக்கு அன்னமிட்ட பலனை அடைவான். இத்தலத்தில் கணநேரம் தங்குவதும் வழிப்போக்காக வந்தவன் ஒரு இரவு இங்கு தங்கினாலும் முக்தியை தரும். ஸாயங்கால நேரத்தில் மேற்கு நோக்கியுள்ள இந்த ஈசனை வணங்க சிவலோகம் கிடைக்கும். இத்தலத்தில் ஒருபிடி அன்னத்தையோ, செந்நெல், பயறு முதலியவைகளையோ தானம் செய்தால் பூமி தானம் செய்த பலன் உண்டாகும். அதிகம் சொல்வானேன்? இத்தலத்திற்கு சமமான ஊர் உலகிலேயே இல்லை'' என்று நந்தீஸர் சொல்ல கேட்டு அவர்கள் எல்லோரும் ஆனந்த மடைந்தார்கள். பிறகு ஸனத்குமாரர் மீண்டும் கேட்டார்.

''எப்போதும் யாகங்களை செய்து கொண்டிருக்கும் புரூரவஸ் என்பவருக்கு எவ்விதம் குஷ்டரோகம் உண்டாயிற்று? அதிலிருந்து அவர் எவ்விதம் விடுபட்டார்? என்பதை எனக்கு விளக்கமாய் சொல்லுங்கள்''.

நந்திகேஸர் சொல்கிறார்:

முன்னொரு காலத்தில் சந்திர வம்சத்தில், சுற்றத்தாரிடம் பிரியமுள்ளவரும் நற்குணம் பொருந்தியவரும், கங்கைக் கரையில் வாஜபேயம், அசுவமேதம் ராஜஸூயம் முதலிய

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

அநேக வேள்விகளை செய்த வரும், அந்தணர்களையும், தேவர்களையும், தான தருமங்களாலும் வேள்விகளாலும் மகிழ்வித்தவருமான புரூரவஸ் என்ற அரசர் பூமி முழுவதையும் ஆண்டு வந்தார். அவர் ஒரு சமயம் அநேகவித மரங்களாலும், மிருகங்களாலும், பறவைகளின் சப்தங்களாலும் சூழப்பட்ட காட்டை அடைந்து நாற்படைகளும் புடை சூழ பற்பல ஆயுதங்களைக் கொண்டு வேட்யைாடினர்.

அவ்வமயம் அங்குள்ள கர்க முனிவரின் குடிசையை அடைந்தார். அவர் பல துஷ்ட மிருகங்களும் கண்டு பயப்படும்படி கடுந்தவமியற்றிக் கொண்டிருந்தார். அவரைக் கண்ட அரசர் ''எனக்கு தாகத்தால் உயிர் போகிறது. குடிக்க நீர் கொடுங்கள் இல்லாவிடில் என்னை கொன்றவராக ஆவீர்கள்'' என்று கூறினர். அதைக் கேட்டுக் கோபமடைந்த முனிவர் ''என்னைப் பார்த்து இவ்விதம் சொன்ன நீ குஷ்ட ரோகத்தால் துன்பமடைவாயாக'' என்று சாபமிட்டார். நான் அறியாமையால் உம்மைப் பார்த்து இவ்விதம் கேட்டு விட்டேன். என்னை மன்னித்து என் சாபத்திற்கு விடுதலையையும் சொல்லுங்கள்'' என்று துக்கமும் பயமும் கலந்து வேண்டிக் கொண்டவராக, அரசர், தன் ஸைன்யங்களைப் பார்த்து, ''நீங்கள் உடனே திரும்பி நாட்டிற்கு சென்று என் பிள்ளையிடம் என் கதையைக் கூறி அவனை நாட்டை ஆளச் செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டு அனுப்பிவிட்டு தான் மட்டும் தனியாக, காவிரியின் இரு கரையிலும் உள்ள தலங்களுக்கெல்லாம் சென்று நீராடி இறைவழிபாடு செய்து கொண்டு என் நோய் எப்போது நீங்கும்? நான் எங்கு செல்வேன்? என்ன செய்வேன்? என்றெல்லாம் பலவாறு சிந்தித்தவாறு சென்று கொண்டிருந்தான் அப்போது வானில் இருந்து, ''ஏ அரசனே, நீ நினைப்பதை நான் அறிவேன்; உன் நோய் நீங்கும் வழியை சொல்கிறேன் கேள். நீ பூமீஸ்வரம் எனப்படும் திருநல்லத்தை அடைந்து ப்ரம்மதீர்த்தத்திலும் நீராடி உமாமஹேஸ்வரைக் கண்டு வலம் வந்து வணங்கி துதித்து, அங்கேயே ஒரு லிங்கத்தையும் வைத்து பூஜித்தால் சாபத்தில்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

இருந்தும் விடுபடுவாய்" என்று ஒரு வாக்குக் கேட்டது. அதைக் கேட்ட அரசர் மிகவும் மகிழ்ந்து மெல்ல மெல்ல இத் தலத்தை வந்தடைந்தார்.

பற்பல விதமான மரங்களையுடைய தோட்டத்தையுடையதும், வண்டுகளின் ரீங்காரத்தையுடையதும், அநேக விதமான மிருகக்கூட்டங்களையுடையதும், பல முனிவர்களின் ஆச்ரமங்களையுடையதும், திருநீறும், உத்திராக்கமும் அணிந்து, புலனடக்கத்துடன், மூன்று வேளைகளிலும் இறை வழிபாடு செய்து கொண்டிருக்கும் பற்பல முனிவர்களால் நிரம்பியதுமான, அத்தலத்தைக் கண்ட அரசர் புரூரவஸின் மகிழ்ச்சி ஒரு பரம ஏழையானவன் திரண்ட செல்வத்தைக் கண்டால் அடையும் மகிழ்ச்சியை ஒத்திருந்தது.

பிறகு அரசர் அத்தலத்தில் உள்ள அனேவரையும் வணங்கி அங்குள்ள பூமி தீர்த்தத்திலும் ப்ரம்ம தீர்த்தத்திலும், நீராடி, பட்டாடை திருநீறு, ருத்ராக்கம் அணிந்து அரசமரத்தடியில் உள்ள விநாயகப் பெருமானை முதலில் வணங்கி பிறகு ஆலயத்தினுள் ப்ரவேசித்தார். அங்கு ஜடையில் சந்திரனைத்தூக்கி விளங்கும் உமாமஹேசரைக்கண்டு பக்தியோடு நிலம் தோய வணங்கி மெய்சிலிர்த்து சிரமேல் கரம்குவித்து, ஆனந்தக் கண்ணீர் பெருக துதி செய்ய ஆரம்பித்தார். (அத்தோத்திரத்தை தமிழிலேயே கொடுக்கப்பட்டுள்ளது).

1. உலகைப் படைக்கும் போது ரஜோகுணத்தையும் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தையும், கடைசியில் நாசம் செய்வதற்கு தமோ குணத்தையும் அடைந்து எல்லா உலகிற்கும் காரணமாய் விளங்கும் உமக்கு நமஸ்காரம்.

2. உமது திருவடியையும், தலையையும், காணவிரும்பிய அரியும், அயனும் கீழும் மேலும் நெடுங்கால் சுற்றி அலைந்தும் காண முடியவில்லையோ அந்த மஹாத்மாவான உமக்கு நமஸ்காரம்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

3. எந்த நீங்கள் கொடும் விஷத்தையும் உணவாக்கிக் கொண்டு அரி, அயன், இந்திரன் முதலிய எல்லா தேவர்க ளுடைய பயத்தையும் நீக்கினீர்களோ ஸ ம் ஸ ா ர ம ா கி ய நோயை உடையவர்களுக்கு யார் மருத்துவராய் விளங்குகி ருரோ, அந்த உமக்கு நமஸ்காரம். எனது உருவம் முனிவ ரின் சாபத்தால் பீடிக்கப்பட்டுள்ளது.

4. யார் இமயமலையை வில்லாயும், வாஸுகி எனும் பெரிய ஸர்ப்பத்தை நாண்கயிருகவும், ஸ்ரீ க ண் ண பி ர ா ஸ அம்பாகவும், பூமியைத் தேராயும் ப்ரம்மாவை தேரோட்டி யாகவும் கடலை அம்பருத்துணியாகவும், கொண்டு மூவுலகை யும் நாசம் செய்தாரோ, அந்த உமக்கு நமஸ்காரம்.

5. மஹா விஷ்ணுவானவர் சக்கராயுதத்தைப் பெற மிக பக்தியோடு 1000 தாமரை மலர்களால் உம்மை பூஜித்தார். அதில் ஒரு மலர் குறைந்த போது உடனே தன் கண்ணையே பெயர்த்து வைத்து எண்ணிக்கையை நிரப்பினர். தாமரை களுடன் சேர்ந்து உமது பாதத்தில் விழுந்த கண்ணை எப் போதும் உமது தலையிலேயே தாங்குகின்ற உமக்கு நமஸ் காரம்.

6. சந்திரனை தலையில் தாங்குபவராயும், ஐந்தெழுத்தை ஓதும் சிறந்த பக்தர்களின் மனதில் எப்போதும் வசிக்கிறவரா யும், பூமி தேவியால் பூஜிக்கப்பட்டவராயும் ஆக்கல், அளித் தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து காரியங் களையும் விளையாட்டாகவே செய்கிறவராயும், ஸம்ஸார நோய்க்கு மருந்தாயும் இருக்கிற உமக்கு நமஸ்காரம். ஓ கருணைக் கடலே! முனிவரின் சாபத்தால் தவிக்கின்ற என்னைக் காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்'' என்று உமா மஹேச ரைப் பலவாறு தோத்தரித்த அரசர் நெடுஞ்சாண் கிடையாக அவர் முன் விழுந்து வணங்கி எழுந்து தலைமேல் கைகூப்பி, மெய்சிலிர்க்கக் கண்ணீர் பெருக்கி மௌனமாய் நின்ருர்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

இதனால் பெரிதும் மகிழ்ந்த ஈஸன் உமையுடன் கூட லிங்கத்தினின்றும் வெளி வந்து, ''ஓ அரசனே! உமது பக்தி யினாலும், துதிகளாலும் மகிழ்ந்தேன். உமக்கு முனிவரின் சாபத்திலிருந்தும், நோயிலிருந்தும் விடுதலை கிடைக்க வழி சொல்கிறேன்; கேள். நீ இங்கு ஒரு லிங்கத்தை நிறுவி பூஜித்து வா. அதனால் உன் நோய் அகலும்'' என்றும், ''அந்த லிங்கம் 'வைத்ய லிங்கம்' எனப்பெயர் பெற்று விளங் கட்டும்'' என்றும் கூறி மறைந்தார்.

இதனால் பெருமகிழ்ச்சியடைந்த அரசனும் மீண்டும் ஈஸனை வணங்கி வெளிவந்து, கௌதம முனிவரைக் கண்டு வணங்கி, அவரைத் தனக்கு ஆசானாக ஏற்றுக் கொண்டு, ஒரு அழகிய லிங்கத்தைக் கொண்டு வந்து உமாமஹேஸருக்கு கொஞ்சம் வடகிழக்கு பாகத்தில் விதிப்படி நிறுவி, 16 வித உபசாரங்களுடனும், ஆடல் பாடல்களுடனும், பலவித நிவே தனங்களுடனும் பூஜித்து துதி செய்தார். பிறகு அந்த வைத்ய நாதரின் அருளாலும் இத்தலத்தின் மஹிமையாலும், தன் நோய் நீங்கப் பெற்று பதினாயிரம் மன்மதனுக்கொப்பான அழ கான சரீரத்தை அடைந்தார். இதைக் கண்ட முனிவர்கள் எல்லோரும் பெரிதும் வியந்தனர்.

அரசரும் தனது தேசத்திலிருந்து வேலைக்காரர்கள் மூல மாகவும் ஒட்டகங்களின் மூலமாகவும் கோடிக் கணக்கில் பணத்தை கொணரச்செய்து கௌதம முனிவருக்கு காணிக்கை யளித்தார். ஈஸனின் விமானத்திற்கு தங்கத்தை உருக்கி மிக அழகிய கவசம் வேய்ந்தார். வைகாசி மாதத்தில் நடை பெறும் திருவிழாவை மிகப் பெரிதாக நடத்தி பத்தாம் நாள் தீர்த்தவாரி நடந்த பின் பல்லாயிரக்கணக்கான அந்தணர் களுக்கு சிறந்த முறையில் உணவளித்தார். உமாமஹேச ருக்கு பலவிதமான ரத்னம் இழைத்த நகைகளையும், வாஹனங் களையும் செய்து அளித்து, அநேக கிராமங்களையும் அவ்வால யத்திற்கு மான்யமாக அளித்துவிட்டு, இத்தலத்தில் சில மாதங்கள் தங்கியிருந்த பின் தன் நாட்டை அடைந்து கடைசி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

காலத்தில் முனிவர்களுக்கும் கிட்டாத உயர்ந்த மோக்ஷ பதவியை அடைந்தார்.

ப்ரம்மா சொல்கிறார் :

"சிறந்த அறிவாளியான புரூரவஸால் நிறுவப்பட்டு மேற்கு நோக்கி காட்சியளிக்கும் ஆதி வைத்ய நாதரை ஒரு அரைக்கணமாவது கண்டு பூஜிப்பவன் குஷ்டம் முதலியஎல்லா வித நோய்களிலிருந்தும், பிறர் பொருள், பிறர் உயிர் இவை களைத் திருடுகிற தோஷத்திலிருந்தும் உடனே விடுபடுகிறான் ஸந்தேகமில்லை பிறவியில் ஒரு முறையேனும் ப்ரம்ம தீர்த்தத் தில் ஸ்நானம் செய்பவனும், நந்தி தேவர் எதிரில் இலாமல் மேற்கு நோக்கி இருக்கும் ஈஸனை தரிசித்து அவரெதிரில் திரு நீறு தரித்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஒரு முறையேனும் ஓதுபவனும், கோடி முறை ஓதிய பலனைப்பெற்று முக்தி அடை கிறான். மேற்கு நோக்கியுள்ள ஈசனின் ஆலயத்திற்கு ஸம மாய் மற்றொரு தலம் தற்போதும் இல்லை. இனி எப்போதும் இல்லை" என்று கூறினார்.

பத்தாம் அத்தியாயம்

ஸநத்குமாரர் கேட்கிறார் :

"ஓ! கருணைக் கடலான ப்ரம்மாவே! எனக்கு இத்தல மஹிமையைக் கேட்டு இன்னும் திருப்தியாகவில்லை. அமுதம் சாப்பிட்டவனுக்கு திருப்தி எப்படி உண்டாகும்? அதனால் மேலும் சொல்லுங்கள்" என்றார்.

ப்ரம்மா சொல்கிறார் :

"இத்தல மஹிமையை 100 கோடி ஆண்டுகள் முயன்று ஆதிசேஷனே சொன்னாலும் போதாது. எல்லாருக்கும் நலம் தரும் பொருட்டு,கேட்டாலே பாபத்தைப் போக்கி மனக் கவலை களை நீக்கி ஆயுளை அதிகரிக்கச் செய்யக்கூடிய முரண்டக னுடைய கதையை சொல்கிறேன்".

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

''பாரியாத்ர மலையில் குலவர்தனன் என்றொரு அந்தணர் இருந்தார். அவருடைய பிள்ளையான முரண்டகன் என்பவன், தன் குருவாகிய 'ரதீதரர்' என்பவரிடம் வேதங்களை கற்று பல வீடுகளில் பிக்ஷை கேட்டுப் பெற்று புசித்து வாழ்ந்து வந்தான்.

அவ்வமயம் ஒரு நாள் குருவாகிய ரதீதரர், 'அக்னியை அணையாது காத்து வரும்படி' தன் சீடரான முரண்டகனுக்கு உத்தரவு கொடுத்து விட்டு வருணனின் வேள்வியைக் காண வருணனால் அழைக்கப்பட்டு வருணலோகம் சென்றார். அங்கு வருணனால் உபசரிக்கப்பட்டு சில காலம் தங்கினார். இங்கு முரண்டகன் குரு சொல்லியபடி அக்னியை வளர்த்துக் கொண்டு அவர் வரவை எதிர் நோக்கி காலம் கழித்தான்.

அப்போது ஒரு நாள் பகலில் விதிவசமாக, கண்வ முனிவர் பசியோடு அங்கு வந்தார். சிறுவனான முரண்டகன் அறியாமையால் அவருக்கு ஏதும் உண்ணக் கொடுக்கவில்லை. அதனால் அவமானமும் பசியும் மிகுதியான கண்வர், கோபம் அடைந்து, 'ஓ மூடனே, நடுப்பகலில் சாப்பாட்டு வேளையில் வந்த என்னை நீ உதாசீனம் செய்தாய். உன் குருவோ, வந்தோரை உபசரிக்கவும் அக்னியைக் காக்கவும் உன்னை இங்கே இருத்தி உள்ளார். அப்படியிருந்தும் நீ என்னைப் புறக்கணித்து விட்டாய். வீட்டுக்கு வந்தவரை உபசரித்து உணவிடாதவன் பிசாசாகி நரகத்திற்கு செல்வான். மூடனான உன்னை இக்காரியததில் நியமித்த உன் குருவும் அவ்விதமே ஆகட்டும். மனைவியின் பாவம் கணவனையும், சிஷ்யனின் பாவம் குருவையும், மக்களின் பாவம் அரசனையும், அரசனின் பாவம் அரசனுடைய ஆசானையும் வந்தடைகிறது. இது முக்காலமும் உண்மை'' என்று சபித்து விட்டு அவர் வேகமாக வந்த வழியே சென்று விட்டார். முரண்டகனும் பிசாசாக மாறி, தன் நினைவிழந்து அழகற்றவனாக ஒரு பெரிய காட்டை அடைந்தான்.

குருவான ரதீதரர் வருணனுலகிலிருந்து திரும்பி வந்து தன் சீடனைக் காணாது சினத்துடன் தன் மனைவியைக் கேட்டு

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

எல்லா விபரங்களையும் அறிந்து இந்த சாபத்திற்கு விடுதலை எவ்விதம் உண்டாகும் என்று மிகவும் துக்கத்துடன் எண்ணியவாறு இருந்தார். 'அந்த முரண்டகன் செய்தது பெரியதவறு. இனி வருந்திப் பயனில்லை. என்னுடைய பெரும் பாவத்தால் இந்தப் பிசாசுத் தன்மை ஏற்பட்டுள்ளது. இதை எவ்விதம் போக்குவேன்? குடும்பத்தில் உள்ளவர்கள், வீட்டுக்கு வந்த வரை உற்றாராகவும் பெரும் செல்வமாகவும் கருதி பூஜிக்க வேண்டும். இவ்விதம் செய்து ''ஸக்துப்ரஸ்தர்'' எனும் முனிவர் வீடு பேற்றை அடைந்தாரல்லவா! அப்படிப்பட்ட, வந்தோரை உபசரிக்கும் அதிதி பூஜையின் மஹிமையை வர்ணிக்க முடியுமா? நீரில்லாத நதியில் அணைகட்டுவது தேவையா? அதுபோல் பசித்தோருக்குத் தானே உணவிட வேண்டும்? எக்காரியமும் தேவையறிந்து செய்யப்படும் போதல்லவா பயனளிக்கும்? அப்படியிருக்க வீடு தேடி 'பசி' என வந்த வரை புறக்கணித்த பாபியாகி விட்டேனே! இப்படி அழும் என்னை யார் காப்பாற்றுவார்கள்? தெய்வத்தால் வந்த வினையை தெய்வந்தான் நீக்கவேண்டும். உலக முழுவதும் எந்த தெய்வத்தினிடம் உள்ளதோ அந்த தெய்வம் மந்திரங்களுக்கு கட்டுப்பட்டதாகிறது அந்த மந்திரங்கள் ப்ராம்மணர்களிடம் உள்ளன. அப்படிப்பட்ட ப்ராம்மணர்களைப் பூஜிக்காதவனை யார் வந்து காப்பாற்ற முடியும்?'' என்றிவ்வாறு பலவிதமாகப் புலம்பித் தவித்த அந்த ரதீதரரின் முன்பு,கையில் தண்டம், கமண்டலு இவைகளை ஏந்தி, ஜடை மரவுரி இவைகளுடன், 'மேதாதிதி' எனப் பெயர் பெற்ற ஓர் அந்தணர் தோன்றினார்.

அவரை வணங்கி ரதீதரர் தனக்கு நேர்ந்த துக்கத்தை அவரிடம் கூற அந்த மேதாதிதியும் சிறிது நேரம் சிந்தித்துப் பின் அவருக்கு சாபம் நீங்க வழியைச் சொன்னார். ''பிறருக்கு உதவுவதைப் பெரிய அறமாக சொல்கிறார்கள். பிறருக்கு அன்னமளித்ததால் அளித்தவரும் சாப்பிட்டவரும் புண்ணியம் பெறுவதாக சொல்கின்றனர். தன்னையே காத்துக்கொண்டு எப்போதும் பிறருக்கு கெடுதலையே செய்கிறவர்களும் கடவு

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

ளுக்கும்,குருவுக்கும், அந்தணர்களுக்கும், வேதத்திற்கும்,கேடு நினைப்பவர்களும் நரகத்தை அடைகிறார்கள். சிறு வயது முதல் கிழவனுகும் வரை எவ்வழியிலாவது பிறருக்கு உதவ வேண்டும். அதனல் உனக்கு சாபம் நீங்கும் வழியைச் சொல் கிறேன். சூரியனின் கடும் வெயில் மழையைக் கொடுப்பது போல் பெரியோரின் கோபமும் நன்மையே செய்யும். மனிதன் பயமிருந்தால்தான் பாபம் செய்யாதிருப்பான். அதுபோல் உம்மையும் பயப்படுத்தவே இந்த சாபம் நேர்ந்தது. பூமியில் காவேரி, கங்கை என்று புண்ணியத்தைத் தரும் பற்பல நதி கள் உள்ளன. அப்படியிருப்பினும் இந்த பாரதத்தில் காவிரி யின் தென்கரையில் கோகுரநாதரின் தென்கிழக்கில் 2 க்ரோச தூரத்திலும், தேஜினிவன நாதரின் வடமேற்கில் ¼ யோஜனே தூரத்திலும் கல்யாண சுந்தர நாதரின் வடகிழக்கு திக்கில் 2 க்ரோச தூரத்திலும் உள்ள பத்ராஸ்வத்தவனம் என்றும் பூமி க்ஷேத்ரம் என்றும் வழங்கப்படும் திருநல்லத் தலத்திற்கு ஸமமான தலம் ஒன்றுமில்லே. பார்த்த மாத்திரத்தில் ஞானம் உண்டாகக் கூடிய பூமி நாயகர் என்ற லிங்கம் உள்ளதான இத்தலத்தை அடைந்து அங்குள்ள ப்ரம்ம தீர்த்தத்தில் நீராடி அந்த உமாமஹேசருக்கு அருகே ஓர் அம்பு விழக்கூடிய தூரத் தில் உள்ள ஸநத்குமாரரால் பூஜிக்கப்பட்ட லிங்கத்தை நீங்கள் பூஜியுங்கள். அந்த ஈசன் வைகாசி மாதத்தில் உங்கள் முன் தோன்றி உமது சாபத்தை நீக்குவார்'' என்று சொல்லிவிட்டு அந்த மேதாதிதி சென்றுவிட்டார்.

பிறகு ரதீதரர் தன் சீடனுடன் இத்தலத்தை வந்தடைந்து ப்ரம்ம தீர்த்தத்தில் நீராடி, உமாமஹேஸரையும் சனத்குமார லிங்கத்தையும், கண்வர், அகஸ்த்யர், விஷ்ணு, ப்ரம்மா ஆகி யோரால் பூஜிக்கப்பட்ட, கண்வலிங்கம், ஸுந்தரேச லிங்கம், ப்ரம்ம லிங்கம் முதலிய லிங்கங்களையும்,புரூரவஸால் பூஜிக்கப் பட்ட வைத்ய லிங்கத்தையும் பூஜித்து சாபம் நீங்கப் பெற்றவ ராய், அங்கு வருபவர்களையெல்லாம் உபசரித்து அறுசுவை உணவளித்துக்கொண்டு,தெளிந்த மனத்துடன் பிள்ளே பேரன் களுடன் நீண்ட காலம் சுகமாக வாழ்ந்து பின்பு முக்தியடைந்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

தார். மேற்கூறிய ஏழு லிங்கங்களையும் தினமும் ஒருவன் பக்தியோடு தரிசித்து ஞானக் கிணற்று நீரையும் பருகினுலுயின், அவன் கோடி லிங்கங்களை தரிசித்த பலனைப்பெற்று பாவமற்று வனுகி முக்தி அடைவான் ஸந்தேகமில்லை. உமாமஹேஸ்வரைப் பசும் பாலால் அபிஷேகம் செய்பவன் இவ்வுலகில் பெரிய தனவானுக வாழ்ந்து மேலுலகில் சிவனுகவே ஆகிருன். இந்த ப்ரம்ம தீர்த்தத்தின் வடகரையில் இருந்து கொண்டு, எல்லோருக்கும் உணவளித்து உபசரித்து, ஈஸனுக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து தரிசித்து வருபவர்கள் நிச்சயம் முக்தியடைவார்கள்.

இத்தலம் மிகவும் புண்யத்தைக் கொடுக்கிறது.
மிகவும் சௌக்யத்தை கொடுக்கிறது.
நாம் விரும்பியதை எல்லாம் கொடுக்கிறது.
நமக்கு நிச்சயம் மோக்ஷத்தையும் கொடுக்கிறது.

இவ்விதமாக கந்தபுராணத்தில் ஸனத்குமாரருக்கு சொல்லப்பட்ட ஸ்ரீ பூமிஸ்வர க்ஷேத்ர மாஹாத்மியம் எனப் படும் வடமொழி நூலின் தமிழ் வடிவமான திருநல்லத்தல வரலாறு முடிவுற்றது.

முடிவுரை :

இவ்விதமாக புராணங்களில் மிக பெருமை வாய்ந்ததாக வர்ணிக்கப்பட்டுள்ள இந்த தலத்தையும் இங்குறையும் ஈஸனையும் பிற்காலத்தில் ஸமயக்குரவர்களான நாயன்மார்களில் அப்பர் பெருமானும் சம்பந்தப் பெருமானும் தமது தேவார பாடல்களில் கீழ்க்கண்ட 20 பாடல்களால் பாடிப்பரவியுள்ளார்கள். இக்காலத்திலும் இவ்வூர் வாழ் பிரமுகர்கள் பலரும் பல தர்ம கைங்கர்யங்கள் செய்து விழாக்களும் நடத்தி வருகிறூர்கள். இனி வருங்காலத்தின் இளைய தலைமுறையினரான நாமும் இவ்வாலயத்தில் எவ்விதக் குறைபாடுகளும் நேராவண்ணம் உத்ஸவங்களும், நித்திய வழிபாட்டு முறைகளும் முன்னிலும் சிறந்த முறையில் நடத்திவர நமது பரமாசார்யர்களான காஞ்சிப் பெரியவர்களும், தேஹஸுந்தரீஸமேத உமாமஹேசரும் அருள் புரிவார்களாக.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

திருச்சிற்றம்பலம்

திருநல்லம் தேவாரப் பாடல்கள்

திருஞான சம்பந்தர் (முதல் திருமுறை)

1 கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த
வில்லால் அரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லான் நமையாள்வான் நல்லம்நகரானே.

2 தக்கன் பெருவேள்வி தன்னி லமரரைத்
துக்கம் பலசெய்து சுடர்பொற் சடைதாழக்
கொக்கின் இறகோடு குளிர்வெண் பிறைசூடும்
நக்கன் நமையாள்வான் நல்லம் நகரானே

3 அந்தி மதியோடும் அரவச் சடைதாழ
முந்தி யனலேந்தி முதுகாட் டெரியாடி
சிந்தித் தெழவல்லார் தீரா வினை தீர்க்கும்
நந்தி நமையாள்வான் நல்லம் நகரானே.

4 குளிரும் மதிசூடிக் கொன்றைச் சடைதாழ
மிளிரும் அரவோடு வெண்ணூல் திகழ்மார்பில்
தளிருந் திகழ்மேனித் தையல் பாகமாய்
நளிரும் வயல்சூழ்ந்த நல்லம் நகரானே.

5 மணியார் திகழ்கண்டம் முடையான் மலர்மல்கு
பிணிவார் சடையெந்தை பெருமாள் கழல்பேணித்
துணிவார் மலர்கொண்டு தொண்டர் தொழுதேத்த
நணியான் நமையாள்வான் நல்லம் நகரானே.

6 வாசம் மலர்மல்கு மலையான் மகளோடும்
பூசுஞ் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசன் எனவுள்கி யெழுவார் வினைகட்கு
நாசன் நமையாள்வான் நல்லம் நகரானே.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

7 அங்கோல் வளைமங்கை காண அனலேந்திக்
கொங்கார் நறுங்கொன்றை சூடிக் குழகாக
வெங்கா டிடமாக வெந்தீ விளையாடும்
நங்கோன் நமையாள்வான் நல்லம் நகரானே.

8 பெண்ணூர் திருமேனிப் பெருமான் பிறைமல்கு
கண்ணூர் நுதலினன் கயிலை கருத்தினுல்
எண்ணு தெடுத்தானை யிறையே விரலூன்றி
நண்ணூர் புரமெய்தான் நல்லம் நகரானே.

9 நாகத் தணையானும் நளிர்மா மலரானும்
போகத் தியல்பினுற் பொலிய அழகாகும்
ஆகத் தவளோடும் அமர்ந்தங் கழகாரும்
நாகம் அரையார்த்தான் நல்லம் நகரானே.

10 குறியில் சமணோடு குண்டர் வண்தேரர்
அறிவில் உரைகேட்டங் கவமே கழியாதே
பொறிகொள் அரவார்த்தான் பொல்லா வினைதீர்க்கும்
நறைகொள் பொழில்சூழ்ந்த நல்லம் நகரானே.

11 நலமார் மறையோர்வாழ் நல்லம் நகர்மேய
கொலைசேர் மழுவாளைக் கொச்சை யமர்ந்தோங்கு
தலமார் தமிழ்ஞான சம்பந் தன்சொன்ன
கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே.

திருநாவுக்கரசர் (5-ம் திருமுறை)

1 கொல்லத் தான்நம னூர்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய்ய லாவதென் ஏழைகாள்!
நல்லத் தான்நமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே.

2 பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினே
தக்கன் வேள்வி தகர்த்த தழல் வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

3 பிணிகொள் வார்குழற் பேதயர் காதலால்
பணிகள் மேவிப் பயனில்லாப் பாவிகாள்
அணுக வேண்டில் அரன்நெறி யாவது
நணுகு நாதன் நகர்திரு நல்லாமே

4 தமக்கு நல்லது தம்முயிர் போயினால்
இமைக்கும் போதும் இராதிக் குரம்பைதான்
உமைக்கு நல்லவன் தான்உறை யும்பதி
நமக்கு நல்லதுநல்லம் அடைவதே

5 உரைத ளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை யானிடம் நல்லமே
பரவு மின்பணீ மின்பணி வாரொடே
விரவு மின்விர வாரை விடுமினே.

6 அல்ல லாகஐம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே.

7 மாத ராரொடு மக்களும் சுற்றமும்
பேத மாகிப் பிரிவதன் முன்னமே
நாதன் மேவிய நல்லம் நகர்தொழப்
போது மின்எழு மின்புக லாகுமே.

8 வெம்மையான வினைக் கடல் நீங்கினீர்
செம்மை யாய சிவகதி சேரலாம்
சும்மை யார்மலர் தூவித் தொழுமினே
நம்மை யாளுடை யானிடம் நல்லமே.

9 கால மான கழிவதன் முன்னமே
ஏலு மாறு வணங்கிநின் றேத்துமின்
மாலும் மாமல ராளொடு மாமறை
நாலும் வல்லவர் கோனிடம் நல்லமே

10 மல்லி மல்கிய தோளரக் கன்வலி
ஒல்லி யில்ஒழித் தான்உறை யும்பதி
நல்ல நல்லம் எனும்பெயர் நாவினால்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே.

திருச்சிற்றம்பலம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon



கலியுக அவதாரம்

PRINTED BY
KP MARKETING – KUALA LUMPUR

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry